பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 28 | வெள்ளிக்கிழமை 12.01.2018 | கதிர் 68

### சு.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் இன்று வெளியீடு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள்அறிமுகமும்தேர்தல்விஞ்ஞாபனவெளியீடும் இன்றுவெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு பக்கம் 03

## ஆறு ஆண்டுகள் மைத்திரி தொடரலாம் சட்டமா அதிபர் உயர்நீதிமன்றில் வாதம்

கொழும்பு,ஜன.12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனவரி 9ஆம் திகதி தொடக்கம், ஆறு ஆண்டுகளுக்கு அதிபராகப் பதவி வகிக்க முடியும் என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம், 2020 ஆம் ஆண்டுடன் நிறைவடைகிறதா அல்லது 2021ஆம் ஆண்டு வரை அவர் பதவியில் தொடர முடியுமா என்பது குறித்து விவாதிக்க இலங்கை உயர்நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு பக்கம் 18

## அ'புரம் விசேட நீதிமன்றை மூடிவிடுவதற்குத் தீர்மானம்

கொழும்பு,ஜன.12

அனுராதபுரத்தில் இது வரை இயங்கி வந்த அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தை மூடிவிட நீதிச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த நீதிமன்றம் வட மத்திய மாகாண மேல் நீதிமன்றம் – இரண்டு எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 18



## 2021 வரை மைத்திரி பதவியில் நீடிப்பாரானால்

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவது உறுதியே

## மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 12**

**"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை பதவியில் நீடிப்பாரானால், அதே சட்டக் காரணங்களால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நானும் போட்டியிலாம்"**

**- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.** பக்கம் 18

## குழப்பம் செய்த எம்.பிக்கள் மீது அரசு ஒழுக்காற்று நடவடிக்கை

### பிரதி சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு,ஜன.12

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் குழப்பத்தை விளைவித்த அனைத்து உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

இதன்போது, நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் குழப்ப நிலைமைகளின்போது பதிவான பக்கம் 18

## பிணைமுறி மோசடிக்கு கூட்டமைப்பும் பொறுப்பு

### விமலின் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.12

அனைத்துக் கட்சிகளின் கூட்டணி அமைத்த அரசிலேயே மத்திய வங்கி ஊழல் இடம்பெற்றுள்ளது. ஆகவே பிணைமுறி ஊழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் பொறுப்புக் கூறவேண்டும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் விமல் வீரவன்ஸதலைமையிலானதேசியசுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஹம்மட் முஸம்மில்.

பிணைமுறி ஊழலின் பக்கம் 18

## பரீட்சையில் தமிழர்கள் அதிகளவில் சித்தி இதனால் பெறுபேற்றை மறைக்கும் அரசு!

### நல்லாட்சியைச் சாடுகின்றார் சுரேஷ்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.12

கணக்காளர் பரீட்சையில் தமிழர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர் என்பதற்காகப் பரீட்சைப் பெறுபேற்றை வெளியிடாமல் இடைநிறுத்துவதென்பது நல்லாட்சி அரசு என்று சொல்பவர்களின் மிக மோசமான பக்கம் 18

## மைத்திரிக்குப் பதவி ஆசை; சாடுகின்றார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஜன.12

பதவி ஆசை கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க முனைகிறார் என முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பக்கம் 18




நல்லாட்சி அரசு 'பெருங்குடி' மக்களுக்கு தனது தாராளத்தைக் காட்டியிருக்கின்றது.

நல்லாட்சி அரசின் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது அதிரடி அறிவிப்புக்களின் மூலம் 'பெருங்குடி' மக்களை ஊக்குவிக்கும் கைங்கரியத்தை செவ்வனே செய்து வருகின்றார். பக்கம் 03

## சமஷ்டிப் பண்புள்ளது இடைக்கால அறிக்கை

### அரசியல் இலாபத்துக்காகச் சிலர் அதை எதிர்க்கின்றனர் என்கிறார் தவராசா



யாழ்ப்பாணம், ஜன.12

புதிய அரசமைப்புத்தொடர்பான இடைக்கால அறிக்கையில் சமஷ்டிக்கான அடிப்படைப் பண்புகள் உள்ளன என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார். பக்கம் 03

## ஐந்து பிள்ளைகளுடன் தாயைக் காணோம்

யாழ்ப்பாணம்,ஜன.12

ஐந்து பிள்ளைகளுடன், தாயார் ஒருவர் காணாமற்போயுள்ள சம்பவத்தால், யாழ்ப்பாணம் அரசடிப்பகுதியில்,பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்–அரசடி வீதி,நல்லூர்ப்பகுதியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவரே, ஐந்து பிள்ளைகளுடன் பக்கம் 18

## ஆலய வளாகத்தினுள் பிரசாரம் தேர்தல் விதிமுறை மீறலாகும்

### மாவிட்டபுரம் கந்தன் குருக்களுக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன.12

தமிழ்த் தேசியப் பேரவை வேட்பாளர்கள் சிலருக்குத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை நடத்த மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வளாகத்தை வழங்கியமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் விதிமுறைகளை மீறும் செயற்பாடு என அந்த ஆலயத்தின் குருக்களுக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் எடுத்துரைக்கப்பட்டது. பக்கம் 18

## பெண் மீது தாக்குதல்; தமிழ்க்கூட்டமைப்பு வேட்பாளர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜன.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளரான நாகராசா பகீரதன் நேற்று மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பெண்ணொருவரைத் தாக்கினார் பக்கம் 18

## வட்டுவாகலில் 640 ஏக்கரை சுவீகரிக்கின்றது கடற்படை

யாழ்ப்பாணம்,ஜன.12

முல்லைத்தீவு – வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் 640 ஏக்கர் காணி கடற்படையால் சுவீகரிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் பக்கம் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2005 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதியில்

# பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம்

கடந்த ஆண்டுகளில் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட உள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 வரையிலான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கே, இவ்வாறு நிவாரணம் அளிக்கப்பட உள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் பாதிப்புக்குள்ளான ஊடக வியலாளர்களின் முறைப் பாடுகளையும் கோரிக்கைகளையும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழு அறிவித்துள்ளது.

நாட்டில், கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட, தாக்குதல்களுக்குட்பட்ட மற்றும் பல்வேறு விதமான வழிகளில் பாதிப்புக்குள்ளான ஊடகவியலாளர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க மேற்படி விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏற்கனவே குழுவொன்றையும் நியமித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அநீதி இழைக்கப்பட்டுள்ள ஊடக வியலாளர்கள் மற்றும் ஊடக சேவையாளர்கள் தொடர் பிலான முறைப்பாடுகளையும் ஆலோசனைகளையும் இந்த அமைச்சரவை உபகுழு கோரியுள்ளது.

நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரான மங்கள சமரவீர, அனர்த்த முகாமைத்துவ அமைச்சரான அநுர பிரியதர்ஷன யாப்பா, காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரான கயந்த கருணா திலக்க ஆகியோர் இந்த உப குழுவில் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி பொதுச் சந்தை உட்புறத்தை தேர்தல் கூட்டங்களுக்கு பயன்படுத்தாதீர்!

### வர்த்தகர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன. 12

அரசியல் கட்சிகளுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பொதுக் கூட்டங்களுக்கு கிளிநொச்சியின் பொதுச் சந்தையின் உட்புறத்தை பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம் என சந்தையின் பெரும்பாலான வர்த்தகர்கள் ஒப்பமிட்டு கரைச்சி பிரதேச செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் இலங்கை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அமல் ராஜ், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது சேவைச் சந்தையின் உட்புறத்தில் உள்ளூராட்சித் தேர்தல் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு அரசியல் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அறிகின்றோம்.

கடந்த காலத்தில் சேவைச் சந்தை வளாகத்திற்குள் அரசியல் கட்சிகளால் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி கோரிய போது தாங்கள் எமது சந்தை வர்த்தகர்களதும் அவர்களது சொத்துகளதும் பாதுகாப்பு மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் அனுமதி வழங்காது இருந்தீர்கள்.

இது எமது வர்த்தகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், தற்போது தாங்கள் தேர்தல் பிரசார பொதுக் கூட்டங்களுக்கு சந்தையின் உட்புறத்தை பயன்படுத்த அனுமதி வழங்கியிருப்பதாக அறிகின்றோம்.

சந்தையில் பல தரப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளை கொண்டவர்களின் வியாபாரஸ்தாபனங்கள் காணப்படுகின்றமை ஒரு சில கட்சி சார்ந்து கூட்டங்கள் இடம் பெறுகின்ற போது வியாபாரிகளுக்குப் பாதுகாப்பின்மை உருவாகுவதோடு, பல்வேறு அசௌகரியங்களும் உருவாகலாம்.

எனவே, வர்த்தகர்களின் நலன்கருதி அரசியல் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு சந்தையின் உட்புறத்தில் அனுமதி வழங்குவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச செயலாளர் க.கம்சநாதனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, இந்தக் கடிதம் தனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அது தொடர்பில் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்தார். (க-70)

## கல்விக்கதிர்

### தரம் 5 புலமைப் பரிசில் வினாத்தாள்களின் விடைகள்

பிரபல ஆசிரியர் தயாரித்து கடந்த 7ஆம் திகதிகளில் வெளியான வினாத்தாள் பகுதி I மற்றும் II இற்கான விடைகள் வருமாறு:-

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| 01 - 3 | 11 - 2 | 21 - 3 | 31 - 3 |
| 02 - 2 | 12 - 3 | 22 - 2 | 32 - 1 |
| 03 - 2 | 13 - 3 | 23 - 3 | 33 - 3 |
| 04 - 3 | 14 - 3 | 24 - 3 | 34 - 2 |
| 05 - 1 | 15 - 1 | 25 - 3 | 35 - 1 |
| 06 - 2 | 16 - 3 | 26 - 2 | 36 - 2 |
| 07 - 1 | 17 - 3 | 27 - 3 | 37 - 3 |
| 08 - 3 | 18 - 3 | 28 - 2 | 38 - 1 |
| 09 - 3 | 19 - 3 | 29 - 1 | 39 - 3 |
| 10 - 3 | 20 - 2 | 30 - 1 | 40 - 2 |

### வினாத்தாள் - II

**01**
1- பலவர்ணச் சித்திரங்கள்
2. அகழிகள்
3.சித்திரங்கள்
4.தூரத்தில்- அருகில்
5.நாம்
6.படுத்திருக்கும் ஒரு பெரிய சிங்கம்
7.பெரிய
**02.**
அ.
1. ✓
2. ✗
ஆ.
1- களை
2- வாள்
3-அர்ப்பணம்
**03**
1-இது உங்களுடையதா?
2-தயவு செய்து அங்கே நிறுத்துங்கள்
**04.**
1- I am watering the plants
**05.**
1-Friday
2- play ground
**06.** 1- தாத்தா ஆவாத?
07. 1- உங்களுக்குப் பசிக்கிறதா?
08. 1-அழவள்ளியப்பா
2-கூனி
3-பாதுகைகளை
09.காலத்தினாற் செய்த
10.பத்திரிகை
11-பாடல்கள்
12-கொண்டாடு.
13-அறிந்தது.
14.1. டெங்கு நோய் பரவாமல் இருக்க நீர் தேங்கும் பொருள்களை அகற்றி இடங்களைத் துப்புரவாக்கல்.
2.டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் எமக்கு அருகில் வராமல் இருக்க புல்லெண்ணெய் பூசுதல் வேண்டும்.
3- இளநீர் கோம்பைகள், தேங்காய்ச் சிரட்டைகள் என்பவற்றை வெளியே வீசக் கூடாது.
15. 9999
16. 100 10cm
17.81,243
18.344விசுக்கோத்துக்கள்.
19.45
20. 80 மாம்பழங்கள்.
21.6m 30cm
22.274 பலூன்கள்
23.4 மணித்தியாலம் 20 நிமிடம்.
24.37 mm
25. ரூபாய்-37 சதம்-50
26.22m
27.6.0
28.v,ix,xii,xiv,xvi
29. ▲
30.0.6
31. 1.ரூபாய்-7 சதம்-50
2. ரூபாய்-42 சதம்-50
32.1
33.4
34.1
35.2
36.3
37.1
38.3
39.2
40.1
41.3
42.3
43.4
44.3
45.4
46.2
47.2
48.2
49.1
50.4
51.4
52.2
53.2
54. -
55.2
56.4
57.3
58.4
59.1
60.1
61.2
62.1

### ரஷ்ய தேயிலை தடை விவகாரம்:

# நல்லுறவில் பாதிப்பு ஏதும் ஏற்படாது என்கிறார் தூதுவர்



கொழும்பு, ஜன. 12

எமது நாடு தற்காலிகமாக இலங்கை தேயிலைக்குத் தடை விதித்தமை ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவில் எந்தவித பாதிப்பையும்; ஏற்படுத்தாது என்று இலங்கையில் உள்ள ரஷ்ய தூதுவர் யுறி மெற்றரி தெரிவித்துள்ளார்.

பொதி செய்யப்பட்ட இலங்கை தேயிலையில் காணப்பட்ட வண்டின் காரண மாகவே ரஷ்யா இலங்கை தேயிலைக்கு தற்காலிக தடையை விதித்தது என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

ரஷ்ய தூதுவருக்கும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருக்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் ரஷ்ய தூதுவர்மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையுடனான நல்லுறவை வலுப்படுத்த நாம் விரும்புகின்றோம். இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் தற்போது குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. பாரம்பரிய தயாரிப்புத்துறையில் உள்ள வர்த்தக நடவடிக்கையை விரிவுபடுத்த வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் மொஸ்கோவில் இந்த வருடத்தில் நடைபெறவுள்ள ரஷ்ய இலங்கை ஆணைக்குழு கூட்டத்தில் இலங்கை கலந்து கொள்ளும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதனைத் தொடர்ந்த பெரியளவிலான வர்த்தக நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பில் எரிசக்தி மற்றும் விவசாயத் துறையின் மேம்பாட்டுக்காக ரஷ்யா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# பதிலடி கொடுத்தோம் என்கின்றார் மரிக்கார்!

கொழும்பு, ஜன. 12

கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மைத் தாக்கியதாலேயே நாமும் பதிலடி கொடுத்தோம் என அரச தரப்பு ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற அசம்பாவிதத் தின் பின்னர் எஸ்.எம். மரிக்கார், சமிந்த விஜேசிறி மற்றும் ஹெக்டர் அப்புஹாமி ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளனர்.

எம்மைத் தாக்கும் போது நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதனாலேயே நாமும் தாக்கினோம் என்றும் எஸ்.எம். மரிக்கார் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுப்பிட்டி இளைஞர் இருவர் கொலை:

# ஐந்து இராணுவத்தினருக்கு எதிரான வழக்கு ஏப்.12 இற்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.12

சிறுப்பிட்டி இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 12ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

1997 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28ஆம்திகதியாழ்ப்பாணம்சிறுப்பிட்டி பாடசாலையின் பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் 16 இராணுவத்தினரை அச்சுவேலிபொலிஸார் கைது செய்தனர். எனினும் 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் 16 இராணுவத்தினருக்கும் பிணை வழங்கியது.

இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று சட்டமா அதிபரால் 2016ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினில் இருவர் போரில் உயிரிழந்தனர். இந்த நிலையில் ஏனைய 14 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 9 இராணுவத்தினர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். ஏனைய 5 இராணுவத்தினருக்கும்யாழ்ப்பாணம்மேல் நீதிமன்றம் கடந்த வருடம் பிணை வழங்கியது.


இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்கள் 5 பேரும் மன்றில் முன்னிலையாகினர்.

இந்த வழக்கை முன்னெடுப்பதற்கு மன்னார் மாவட்ட அரச சட்டவாதி சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டார். அவர்தற்போதுகிழக்குமாகாணத்துக்கு இடமாற்றமாகிச் சென்றுள்ளார். அதனால் வேறொரு அரச சட்டவாதியை விரைவில் நியமிப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.எனவேவழக்குவிசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று அச்சுவேலி பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தையடுத்து வழக்கு விசாரணையை வரும் ஏப்ரல் 12ஆம் திகதிவரை ஒத்திவைத்து நீதிமன்று உத்தரவிட்டது.

## விடுதலைக் கூட்டமைப்புக்கு தடை எதுவும் வரவேயில்லை

### சுரேஷ் நேற்றுத் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்த முடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார் என அறிகிறோம். ஆனால் உத்தியோகபூர்வமாக எமக்கு ஓர் அறிவித்தலும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் ஓர் ஊடகம் அந்தச் செய்தியைப் பிரசுரித்திருக்கிறது.

– இவ்வாறு கூறினார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழரசுக் கட்சியின் செயலாளர் தேர்தல் ஆணையகத்திற்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் எனவும், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தாங்களும், புளொட் மற்றும் ரெலோ ஆகிய கட்சிகள் செயற்பட்டு கொண்டிருக்கும் நிலையில் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்னும் பெயர் தமக்கு இடையூறாக இருப்பதாகவும் கூறியுள்ளார் என அறிகிறோம்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாத ஒரு கட்சியாகும். எங்களுடைய தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பும் பதிவு செய்யப்படவில்லை. ஆகவே அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமானால் அரசுடன் சேர்ந்தியங்கும் தமிழரசுக் கட்சியை திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கையாகவே அது அமையும்.

எனவே எமக்கு இதுவரை உத்தியோகபூர்வமான அறிவித்தல்கள் வழங்கப்படவில்லை. வழங்கப்பட்டால் அது தொடர்பாக சட்ட ரீதியாகப் பேசுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம் – என்றார். (ஐ–7)

## தலை முடிக்கு பல வர்ணங்கள் பூசி நீதிமன்றில் தோன்றியவர் சிறையில்

தலைமுடிக்கு பல வர்ணங்களைப் பூசி நீதிமன்றை அவமதிக்கும் வகையில் செயற்பட்டார் என்ற குற்றத்துக்காக நபர் ஒருவருக்கு மூன்று மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம்.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு வந்த சந்தேகநபரொருவருக்கே நீதிவான் ஏ.எம்.எம்.றியால் இந்தத் தண்டனையை விதித்தார்.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரணை நடைபெறும் வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபரொருவர் தலைமுடிக்குப் பல வர்ணங்களைப் பூசி அலங்கரித்து நீதிமன்றுக்கு ஒவ்வாத வகையில் ஆடை அணிந்து வந்துள்ளார்.

அந்த நபரின் வழக்கு திறந்த மன்றில் கூப்பிடப்பட்டது. சந்தேகநபர் கூண்டில் ஏறி நிற்கும்போதும் அசாதாரணமாகச் செயற்பட்டார்.

அதனை அவதானித்த மன்று, சந்தேகநபருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைப் பதியுமாறு நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு உத்தரவிட்டது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு சந்தேகநபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டது.

அதன் மீதான விசாரணையை அடுத்து நீதிமன்றை அவமதித்த குற் றத்துக்காக அந்த நபருக்கு மூன்று மாதக் கடூழியச் சிறைத்தண்டனையை விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ஐ)

## யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே மோதல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்ற மோதலில் நான்கு மாணவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக கலைப்பீட இறுதியாண்டு மற்றும் 3 ஆம் வருட மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட சிறிய முரண்பாடு வாய்த்தர்க்கமாக மாறி கைகலப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இதன்போது 3 ஆம் வருட மாணவர்கள் இருவரும் நான்காம் வருட மாணவர்கள் இரு வருமாக மொத்தம் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த மாண வர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் சென்றனர். இறுதி வருட மாணவர்கள் சிகிச்சை பெற்று வெளியேறினர்.

மூன்றாம் வருட மாணவர்களான பத்மநாதன் விஷ்ணுகீர்த்தன், கேதீஸ்வரன் கிருஷ்ணசாந்தன் ஆகிய இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து உருவான குழப்ப நிலைமை மாணவ பிரதிநிதிகளின் தலையீட்டால் சுமுக நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## முதலமைச்சர் தலைமையில் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜன.12

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் அதன் இணைத் தலைவர்களில் ஒருவரான முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தலைமையில் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் கருத்தமர்வும் கலந்துரையாடலும் இடம்பெறவிருக்கின்றன.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பேராசிரியர் முத்துக்குமாரசாமி சொர்ணராஜா *‘வடக்கு – கிழக்கு தமிழர் தம் உரிமைகளின் கேடயமாக சர்வதேச சட்டம்’* என்ற தலைப்பிலும் –

யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் குமாரவடிவேல் குருபரன் *‘இடைக்கால அறிக்கை – மாயைகளைக் கட்டுடைத்தல்’* என்ற தலைப்பிலும் – உரையாற்றுவர். (உ)

### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் சோடா ரகங்களுக்கு வரியைக் கூட்டி, பியருக்கு வரியைக் குறைத்து பெருங்குடி மக்களை மகிழ்வித்த நிதியமைச்சர், இப்போது மதுபானக் கடைகளைத் திறக்கும் நேரத்திலும் தளர்வை ஏற்படுத்தியிருக்கின்றார்.

இனிமேல் பெருங்குடி மக்கள் மதுபானச் சாலை திறப்பதற்காகக் காலை 10 மணிவரை பார்த்திருக்கத் தேவையில்லை. காலை 8 மணிக்கே அவற்றைத் திறப்பதற்கான அனுமதியை புதிய வர்த்தமானி அறிவிப்பு மூலம் விடுத்திருக்கின்றார் நிதி அமைச்சர்.

அதுபோல, இரவிலும் 9 மணிக்கு முதல் அவசரப்பட்டு மதுபானசாலைகளில் இடிபடத் தேவையில்லை. அவற்றை இரவு 10 மணிவரை திறப்பதற்கு வசதி செய்திருக்கின்றார் அவர்.

அதேசமயம் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் எந்தக் கட்டுப்பாடும் இன்றி மதுபான சாலையில் மதுவை வாங்குவதற்கு அனுமதி அளிக்கும் விதத்தில் சட்டத்தைத் திருத்துவதாக அரசு அறிவித்துள்ளது.

சுமார் 62 ஆண்டுகளுக்கு முன்னர் – 1955 இல் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலம் – இவ்விடயத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட பாகுபாட்டு நடவடிக்கை இப்போது திருத்திச் சீர்செய்யப்படுவதாக அரசுத் தரப்பில் கூறப்படுகின்றது.

இதேசமயம், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மதுபான சாலைகளில் தொழில் புரிவதற்கும் புதிய சட்டம் முழுச் சுதந்திரமும் அனுமதியும் வழங்குவதாகக் கூறப்படுகின்றது.

அப்படி என்றால் இனிமேல் நாட்டில் பெண்நிலை சமத்துவம் கொடி கட்டிப் பறக்கப்போகின்றது போலும்...!

- மின்னல்.

## கலைப்பீட மாணவருக்கு வகுப்புத் தடை

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டம் மற்றும் இராமநாதன் நுண்கலைப் பீடம் தவிர்ந்த ஏனைய கலைப்பீட 3ஆம் மற்றும் 4ஆம் வருட மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரும் வரை 3ஆம் மற்றும் 4ஆம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் உட்பிரவேசிக்கத் தற்காலிக தடை விதிக்கப்படுவதாக கலைப்பீடாதிபதி நேற்றிரவு அறிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கு இடையே நேற்று மாலை இடம்பெற்ற கைகலப்பையடுத்தே இந்த அறிவுறுத்தல் கலைப்பீடாதிபதியால் வழங்கப்பட்டுள்ளது.

### சு.க.வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நகரிலுள்ள பிள்ளையார் இன் விடுதியில் நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில்போட்டியிடும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது வேட்பாளர்களை அறிமுகமும் செய்து சில தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகமும் தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியீடும் இன்று இடம்பெறவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ–7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமஷ்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:

ஏக்கிய ராச்சிய – ஒருமித்த நாடு என் பன தொடர்பில் தெளிவான பொருள் கோடல் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக வீணாகக் குழம்பத் தேவையில்லை.

இதுபற்றித்தெரிந்தவர்கள்அரசியல்லாபங்களுக்காகவே எதிர்க் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இடைக்கால அறிக்கையில் சமஷ்டிக்கான அடிப்படை விடயங்கள் காணப்படுகின்றன. அவற்றைச் செழுமைப்படுத்த வேண்டும். மாறாக, அந்த அறிக்கையை முற்றாக எதிர்ப்பதில் எவ்வித அர்த்தமும் கிடையாது –என்றார். (ஐ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின்
தலைவரும் சட்டத்தரணியும் முன்னாள்
நீதிபதியுமாகிய **திரு.இ.வசந்தசேனன்**
அவர்களின் அன்புப் புதல்வி

**திருமதி காயத்திரி காசிதாசன்**

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*66, கல்லூரி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*

**சைவபரிபாலன சபையினர்**

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தனிவழி போக ஐ.தே.க. தயார்

நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான உறவு மிக மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நல்லாட்சி அரசு ஒன்றை நிறுவுவதற்கு பிரதான கட்சிகளான ஐ.தே.க. மற்றும் சு.க. செய்துகொண்ட இரண்டு வருட கால புரிந்துணர்வு உடன்பாடு - இணக்க ஏற்பாடு - கடந்த டிசெம்பர் மாதத்துடன் காலாவதியாகிவிட்டது.

ஆனால், அது தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் முடிவடையும் வரை - பெப்ரவரி மாதம் நடுப்பகுதி வரை - தற்காலிகமாகத் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், களத்தில் நடைபெறும் சம்பவங்கள், போக்குகள், நடவடிக்கைகள் என்பன அதற்கு முன்னரே நல்லாட்சி அரசு கவிழ்ந்துவிடும் என்பதற்கான சமிஞ்ஞைகளைத் தருகின்றன என்கின்றன கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தயவில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சிப்பீடம் ஏறிய மைத்திரிபால சிறிசேன, அதன் பின்னர் தமது கைக்கு வந்த சுதந்திரக் கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டு, தம்பாட்டில் - தனிவழியில் - செயற்படத் தொடங்கி விட்டார் என ஐ.தே.கட்சி இப்போது கருதுகின்றது.

பிரதான பங்காளிக் கட்சியான தங்களுக்குத் தெரிவிக்காமல் - தெரியப்படுத்தாமல் - அரசியல் காய்நகர்த்தல்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்பாட்டில் முன்னெடுக்கின்றார் என்று கருதும் ஐ.தே.க. தலைமை, இனிமேலும் மைத்திரிபால சிறிசேனவில் தங்கியிருப்பதோ, அவரது நிர்வாகத்துக்கு முண்டு கொடுப்பதோ பொருத்தமேயற்றது என்ற முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

மத்திய வங்கியின் பிணைமுறி விற்பனை மோசடி தொடர்பான ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கையை தமது அரசின் பிரதமருக்குக் கூடக் காட்டுவதற்கு ஜனாதிபதி மறுத்து வருகின்றார். அவ்வாறு வழங்கப்பட முடியாது என அவர் பிடிவாதம் பிடித்தும் வருகின்றார்.

அந்த அறிக்கையின் ஒரு பகுதியை மட்டும் வெளியிட்டு, ஐ.தே. கட்சி மீது அரசியல் சேறு பூசுவதற்கான களச்சூழலை ஏற்படுத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தந்திரோபாயமாக - சாணக்கியமாக - செயற்படுகின்றார் என்று ஐ.தே.கவினர் கருதுகின்றனர்.

இதேவேளை, பிணைமுறி ஊழல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக நேற்று முன்தினம் கூடிய நாடாளுமன்றக் கூட்டத்தில் பெரும் களேபரம் இடம்பெற்றது. அது பற்றிய செய்திகள் தெற்கில் பரபரப்பாகவும் பரவலாகவும் வெளியிடப்பட்டன. அதன் மூலம் இந்தத் தேர்தல் சமயத்தில் ஐ.தே.கட்சியின் கீர்த்திக்கு ஆப்பு வைக்கப்பட்டிருப்பதாக அக்கட்சியினர் கருதுகின்றனர்.

மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் முழு விவரம் வெளியிடப்பட்டிருந்தால் - அதனை ஜனாதிபதி வெளியிட்டிருந்தால் - இப்போது கூட்டு எதிரணியில் இருந்தபடி ரணகளம் பண்ணிய தரப்பினர், முன்பு ஆட்சியில் இருந்தபோது செய்த ஊழல் விடயங்களும் அம்பலமாகியிருக்கும். அவர்கள் நாடாளுமன்றத்தில் 'கப்சிப்' - என்று அடங்கியிருந்திருப்பர் என்றும் ஐ.தே.கட்சியின் பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆட்சிக்கு - அதிகாரத்துக்கு - வந்ததும், ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்த ஜனாதிபதி, அதன் மூலம் தமது பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளுக்குப் பதிலாக ஐந்தாகக் குறைப்பதற்கு அப்போது இணங்கிச் செயற்பட்டார் என்றும் -

இப்போது அந்தப் போக்கிலிருந்து மாறித் தம்பாட்டில் மேலும் ஒரு வருடம் - அதாவது ஆறு வருடங்கள் - பதவியில் நீடிக்கும் முயற்சியை அவர் ஆரம்பித்திருக்கின்றார் என்றும் -

ஐ.தே.க. தலைமை கருதுகின்றதாம். அதுவும், தமது பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளாகக் கருதலாமா என்று உயர்நீதிமன்றத்தைக் கோரும் நடவடிக்கையைத் தாம் எடுப்பதற்கு முன்னர் கூட, அது குறித்துத் தமது அரசின் பிரதமரான ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தன்னும் அவர் தெரியப்படுத்தவில்லை என்று பொருமுகின்றன ஐ.தே.கவின் உயர்வட்டாரங்கள்.

தங்களை இருட்டில் வைத்துக்கொண்டு, கனகச்சிதமாகக் காய் நகர்த்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் போக்குக் குறித்து ஐ.தே.கட்சித் தலைவர்கள் தங்களுக்குள் அவசர அவசரமாக நேற்றும், நேற்றுமுன்தினமும் கூடி ஆராய்ந்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதுக்கு அனுமதித்தால் - அல்லது அதைப் பார்த்துக்கொண்டு ஐ.தே.கட்சி பதிலடி நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருந்தால் - கட்சியின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்து வருகின்றனர்.

இந்த நெருக்கடிச் சூழலில் தீர்க்கமான அரசியல் முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் அது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மனம் திறந்து ஒரு தடவை பேசுவது நல்லது - உசிதமானது - எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

அதனடிப்படையில், அடுத்து வரும் தினங்களில் ஜனாதிபதியை பிரதமர் விக்கிரமசிங்க தனித்துச் சந்தித்து நீண்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்தச் சந்திப்பின் முடிவில் ஐ.தே.கட்சி தனி வழிபோகத் தீர்மானித்துவிட்டதா, இல்லையா என்பது தெரியவரும்.

# தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுத் தராது உண்மையான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது

## அமெ. தூதரக அதிகாரிகளிடம் அமைச்சர் அனந்தி சசிதரன் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தராது இலங்கையில் உண்மையான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நடைமுறை அரசியல் நிலைவரம் குறித்து அறிந்து கொள்ளும் நோக்கிலும் நட்புரீதியான உறவை மேம்படுத்தும் முகமாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் உத்தியோகபூர்வமாகச் சந்திப்பை மேற்கொண்டிருந்தார்கள்.

வடக்கு மகளிர் விவகார அமைச்சர் அலுவலகத்தில் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அரசியல் விவகாரங்களுக்கான பிரதி பிரதம அதிகாரி மற்றும் இலங்கைக்கான அரசியல் விவகார அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்களுடனான இந்தச் சந்திப்பில் அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கடுமையான உயிர் அச்சுறுத்தல் இருந்த நேரத்தில் தான் எனது அரசியல் பிரவேசம் இருந்தது.

அரசியலை விட்டு ஒதுங்கி விடலாமோ என்று எண்ணும் அளவிற்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்திருந்தன. அந்த நேரத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக கடமையாற்றிய மிச்சேல் ஜேசிசன் அம்மையார் வழங்கியிருந்த ஆதரவுதான் என்னைத் தொடர்ந்தும் பயணிக்க வைத்தது என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

வட மாகாண அமைச்சராக எவ்வாறு செயற்பட்டு வருகின்றீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்–

பெயருக்கு பல அமைச்சுகளுக்குரிய அமைச்சராக இருந்தாலும், போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற அடிப்படையில் மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வளித்தல் ஆகிய அமைச்சுகளின் முழுமையான செயற்பாடென்பது உடனடித் தேவையாக உள்ளது.

ஆனால், குறிப்பிட்ட இந்த அமைச்சுக்கான ஆளணியும் இல்லாமல் நிதியும் இல்லாமல் பெயரளவிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு–கிழக்கு மாகாணங்கள் போரால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

குறிப்பாக போருக்குப் பின்னர் வடக்கு மாகாணம் பெரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இவ்வாறான நிலையில் இருந்து எமது மக்களை மீட்டெடுக்கும் நோக்கில் இவ் அமைச்சுகள் முழுமையான வினைத்திறனுடன் இயங்க மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அஞ்சல் வாக்குச்சீட்டுகள் அனுப்புவதை பிற்போட்டது தேர்தல்கள் ஆணைக்குழு!

கொழும்பு, ஜன.12

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டு களை அஞ்சல் திணைக்களத்திடம் கையளிப்பதைத் தேர்தல்கள் ஆணைக்குழு பிற்போட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு, 5,60,536 அரச பணியாளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான வாக்குச் சீட்டுகளை நேற்று அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக்க தேர்தல்கள் ஆணைக்குழு முன்னதாகத் திட்டமிட்டிருந்தது.

எனினும், அஞ்சல் திணைக்களப் பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் வாக்காளர் பட்டியல் தொடர்பான சில நிர்வாகக் காரணங்களால், வாக்குச் சீட்டுகளை கையளிப்பதை நாளை 13 ஆம் திகதி வரை பிற்போடுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மட்டும் இந்த முடிவில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# பிணைமுறி ஊழல் தாக்கம்; அடுத்த 30 ஆண்டுகள் பாதிப்பு

கொழும்பு, ஜன. 12

பிணைமுறி ஊழலில் தாக்கம் அடுத்த 30 ஆண்டுகளுக்கு மக்களைப் பாதிக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஹம்மட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.



அனைத்துக் கட்சிகளின் கூட்டணி அமைத்த அரசாங்கத்திலேயே மத்திய வங்கி ஊழல் இடம்பெற்றுள்ளது. ஆகவே, பிணைமுறி ஊழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமான ஆட்சியை முன்னெடுக்கும் அரசாங்கமே இந்த அரசாங்கமாகும். குறுகிய காலத்தில் நாட்டை வீணாக்கிய ஒரே அரசாங்கம் இதுவே யாகும். இவர்களின் மூலமே நாடு துண்டு துண்டாகச் சிதறி வருகின்றது.

ஒருபுறம் நாட்டினை துண்டாடும் சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது, ஜெனிவா உடன்படிக்கைகளுக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்து தமக்குத் தாமே சுருக்குக் கயிற்றைப் போட்டுக்கொண்ட அரசு இதுவாகும்.

அத்துடன், தேர்தலைப் பிற்போட்டு எதிர்க்கட்சியை கைக்குள் வைத்துக்கொண்டு முழுமையாக நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தி இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

## நாளை

13.01.2018
சனிக்கிழமை
நட்சத்திரம் : அனுசம்
பி.ப. 12.54 வரை
திதி : துவாதசி பி.இ.2.16 வரை
சுபநேரம் : 3.33 – 05.03 வரை
இராகுகாலம்: 9.33 – 11.03 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேத வைத்தியர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி ஆரம்பம்

கொழும்பு, ஜன.12

ஆயுர்வேதத் திணைக்களத்தின் புதிய ஆயுர்வேத வைத்தியர்கள் 640 பேருக்கு தலைமைத்துவம் அபிவிருத்தி தொடர்பான பயிற்சித் திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

தலைமைத்துவம் மற்றும் நடைமுறை பயிற்சியின் ஊடாக தலைமைத்துவத் திறமை மற்றும் 'நற்சிந்தனை' எனும் தொனிப் பொருளின் கீழ் ஆறு நாள்களைக் கொண்டதாக இந்த நிகழ்ச்சித் திட்டம் இராணுவப் பயிற்சி பாடசாலைகளில் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமானது. இந்தப் பயிற்சித் திட்டம் இன்று வரை இடம்பெறவுள்ளது.





இனத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புடன் இராணுவத் தளபதியின் எண்ணக் கருவிற்கமைய இராணுவப் பயிற்சி நிலையங்களான தியத்தலாவ, கலத்தேவ, மின்னேரிய, எம்பிலிபிட்டிய மற்றும் பூவெலிகட முகாம்களில் நடைபெறுகின்றது.

இந்தப் பயிற்சியில் தலைமைத்துவம், குண தர்மங்கள், பயிற்சியின் மூலம் முன்னேற்றம், வாழ்க்கையில் சவால்களை வெற்றியிடுகின்றமை தொடர்பாகவும், தவறான சமூக எதிர் பார்ப்புகள் மற்றும் அடிப்படை தேவைகள் தொடர்பான கருத்துகள் அறிவூட்டப்படுகின்றன.

சுகாதார, போசனம் மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மூலம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க இந்த பயிற்சி நெறி தொடர்பாக இராணுவப் பயிற்சி பணிப் பாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன் பிரகாரம் இராணுவ பயிற்சி முகங்களான தியதலாவ தொண்டர் பயிற்சி பாடசாலை, மின்னேரிய காலாட் படை நிலையம், அம்பாறை, தியத்தலாவை துப்பாக்கி சூட்டு பயிற்சி நிலையம், கலாஓயா, கலத்தேவ, பனாகொட, மின்னேரிய, எம்பிரிப்பிட்டிய பயிற்சி, பூவெலிகட, அம்பேபுஸ்ஸ தொம்பகொட, குட்டிகல, புத்தளம், தெகிஅத்தகண்டிய மற்றும் ரண்டெம்ப பயிற்சி பாடசாலைகளில் இந்த பயிற்சிகள் இடம்பெற்றன.

இந்த பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்விற்கு இராணுவ உயரதிகாரிகள் மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்பு சமுர்த்தி அதிகாரிகளுக்கு இராணுவத்தினரால் இந்தப் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க)

### ரணிலுக்கு எதிரான பிரேரணை;

## கூட்டு எதிர்க்கட்சியின் எம்.பிக்கள் கையொப்பம்

கொழும்பு, ஜன. 12

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் கையொப்பமிட்டுள்ளனர்.

கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூடிய போது இந்த கையொப்பமிடும் நடவடிக்கை இடம்பெற்றது. மத்திய வங்கி முறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை அறிக்கையை வைத்து பிரதமருக்கு எதிராக இந்த பிரேரணை தயார்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்துவரும் நாள்களில் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கையொப்பமிடவுள்ளனர் என கூட்டு எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக மத்திய வங்கி முறி மோசடிக்கு ஆதரவானவர்கள் யார்? எதிரானவர்கள் யார்? என்பதை மக்கள் பகிரங்கமாக அறிந்து கொள்ளலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## அளுத்கமவில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை!


களுத்துறை மாவட்டத்தில், பேருவளை மற்றும் அளுத்கமை பிரதேசங்களில் 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15, 16 ஆம் திகதிகளில் ஏற்பட்ட சம்பவங்களில் பாதிக்கப்பட்ட வீட்டு உபகரணங்கள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.



பாதிப்புக்கள் தொடர்பில் பரிசீலிப்பதற்காக நியமிக் கப்பட்ட அதிகாரிகள் குழுவால் மேற்கூறப்பட்ட பாதிப்புக்களுக்கும் நட்டஈடு தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகாரங்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட யோசனைகளைக்கவனத்திற் கொண்டு, தற்போது காணப்படுகின்ற விதிகளுக்கு அமைவாக, அந்த நட்டஈட்டு தொகையை வழங்குவது தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## பொருத்தமற்ற இடங்களில் வீதி விளக்குகள்



மக்கள் விசனம்

வவுனியா, ஜன. 12

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் அக்கராயன் பிரதேசத்தில் பொருத்தப்படுகின்ற சூரிய சக்தி வீதி மின் விளக்குகள் பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் அக்கராயன் பிரதேசத்தில் பல இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகிறது. ஆனால், அவை மக்கள் அமைப்புகளினால் ஏற்கனவே எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு மாறாக சில தனிப்பட்ட நபர்களின் செல்வாக்கின் அடிப்படையில் பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், பொது மக்களுக்கோ, பொது பயன்பாட்டிற்கோ அதிகளவு நன்மைகள் ஏற்படப் போவதில்லை.

பிரதேச பொது அமைப்புகள் வழங்கியுள்ள முன்மொழிவுகளுக்கு அமைய வீதி விளக்குகளை பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கரைச்சி பிரதேச சபையிடம் பொதுமக்கள் கோரியுள்ளனர். (க-76)

## காங்கேசன் துறைமுக அபிவிருத்தி; கடனுதவி வழங்குகிறது இந்தியா!

கொழும்பு, ஜன. 12

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு, 4 கோடியே 77 லட்சம் டொலர்கள் 690 கோடி கடன் உதவியை இந்தியா வழங்கவுள்ளது.




இதற்கான உடன்பாட்டில் இந்தியாவும் இலங்கையும் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளன.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில், இலங்கையின் நிதி அமைச்சின் செயலர் கலாநிதி சமரதுங்கவும், இந்தியாவின் எக்சிம் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் டேவிட் ரஸ்க்குயின்ஹாவும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இலங்கை ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, 2010 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு உதவி வழங்க இந்தியா இணங்கியிருந்தது.

இதையடுத்து, 2011 ஜூலையில் இதுதொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு இரண்டு நாடுகளுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.

இந்தநிலையில், காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் எக்சிம் வங்கியிடம் இருந்து 4 கோடியே 77 லட்சம் டொலர் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அமைச்சரவை கடந்த ஆண்டு மே மாதம் அனுமதி அளித்தது.

இதனடிப்படையிலேயே, நேற்று முன்தினம் இரண்டு நாடுகளின் அதிகாரிகளுக்கும் இடையில் இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை இலங்கையின் துறைமுக அதிகாரசபையே நடைமுறைப் படுத்தவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்பாளர் ஒருவர் கஞ்சாவுடன் கைது!

காத்தான்குடி,ஜன.12

காத்தான்குடி உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கஞ்சாவுடன்கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் கஞ்சாவை எடுத்துச் சென்ற போது, காத்தான்குடி, பூனொச்சிமுனை - கடற்கரை வீதி பகுதியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றின் அருகில் வைத்தே இந்த 37 வயதான வேட்பாளர் கையும் களவுமாகக் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்பயணித்த ஓட்டோவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்து 7 நாள் தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்றுள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளர். (ப)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளைத் தேர்தல் அலுவலகம் திறப்பு

கல்முனை,ஜன.12

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்சிவலிங்கத்தின்தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனையில் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வேட்பாளர் க.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இரட்டை அங்கத்தவர் வட்டாரமாகிய கல்முனை 12இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் க.சிவலிங்கம், ச.ராஜன் ஆகிய இருவேட்பா



ளர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

## வீடு வீடாகப் பிரசாரம்; கருணா கூறுகிறார்



மட்டக்களப்பு,ஜன.12

கடந்த கிழமைகளில் வாகரைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரிவுகளில் எமது வேட்பாளர்களுடன் இணைந்து வீட்டுக்கு வீடு சென்று பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தேன் எனக் கருணா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - திருமலை வீதியில் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகளுக்கான உத்தியோகபூர்வ அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

தேர்தல் மிகவும் சாதகமாக அமைந்துள்ளது. காரணம்செலவுகள்குறைந்தவையாகவும் பிரசாரங்கள் கிராம மட்டங்களில் செயற்படுத்தக் கூடியனவாகவும் இருக்கின்றன.

அந்த வகையில் கடந்த கிழமைகளில் வாகரை பிரதேசசபைக்கு உட்பட்ட பிரிவுகளில் எமது வேட்பாளர்களுடன் இணைந்து வீட்டுக்கு வீடு சென்று பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தோம். அதன் பிரகாரம் எதிர்வரும் நாளகளில் நகர்புறம் அண்டிய பகுதிகளில் பிரசாரத்தில் ஈடுபட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்முறைத் தேர்தல் சட்டமூலங்களுக்கு அமைவாக பல சட்ட திட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அதற்கு அமைவாக நாம் பிரசாரங்களில் ஈடுபட்டு எமது நகர்வுகளை நகர்த்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

மாநகரசபையின் மேயர் வேட்பாளர் எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கட்சியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), செயலாளர் வ.கமலதாஸ் மற்றும் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (பு)

## அம்பாறை மாவட்ட மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய மழை!

அம்பாறை,ஜன.12

நீண்டகால வறட்சிக்குப் பின் அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு மழை பெய்துள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பயிர் செய்கைகள் எல்லாம் கருகி, மடிந்த நிலையில் நேற்றுமுன்தினம் மழை பெய்துள்ளது. விவசாயிகள் வானம் பார்த்த பூமியாக இருந்த தங்களது விளை நிலங்களைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், தற்போது மழை பெய்தமை ஓரளவு நிம்மதியைக் கொடுத்துள்ளது. அதற்காக விவசாயிகள் இறைவனுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர். (ப)

## கிரான்புல்சேனை அணைக்கட்டு அமைக்கப்படும்

### நீர்ப்பாசனப் பணிப்பாளர்



ஏறாவூர்,ஜன.12

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச கிரான்புல்சேனை அணைக்கட்டு அமைக்கப்படும் என நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிரான்புல்சேனை அணைக்கட்டு அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்ட நிலையில் அதன் ஆரம்பகட்ட வேலைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக கித்துள், உறுகாமம், கிரான்புல்சேனை நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் தலைமையிலான குழுவினர் நேற்றையதினம் கொழும்பில் இருந்து விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடம் இத்திட்டத்திற்கு அடிக்கல் நடப்பட்டது. அந்நேரத்தில் இந்த ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்காக கற்களின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இந்த ஆற்றின் நடுவில் இருக்கும் கல் தொடர்சியாக 11 மீற்றர் வரை காணப்படுகின்றது. இது இங்கு பாலம் அமைப்பதற்கு சாதகமான ஒரு தன்மையாக இருக்கின்றது. இந்த இடத்தில் முதலில் நாங்கள் பாலம் அமைப்பதாகத் தீர்மானித்துள்ளோம். 6 மீற்றர்கள் அகலமான பாலத்தை அமைக்கவுள்ளோம்.

அதற்கு 50கோடி ரூபா தேவைப்படுகின்றது. அதன் பின்னர் இப்பாலத்திற்கு கதவு அமைப்பதற்கு 15கோடி ரூபா தேவைப்படுகின்றன. தற்போது நாங்கள் இவ் அணைக் கட்டிற்கான இவ்வருட வேலைகளை ஆரம்பித்திருக்கின்றோம்.

இதற்கான ஆய்வு வேலைகள் நிறைவடைந்துள்ளன. அத்துடன் முந்தன்குமாரவேலி ஆற்றின் இரு புறத்தையும் சற்று அகட்டும் போது வெள்ள அனர்த்த காலங்களில் இந்த அணைக்கட்டுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் செய்ய முடியும் என்பது பற்றியும் ஆராய்ந்துள்ளோம். தற்போது இதன் வடிவமைப்பு மற்றும் வரைவு வேலைகள் மேற்கொள்ளவுள்ளோம். இந்த அணைக்கட்டை நாங்கள் அமைத்தே தீருவோம். மக்கள் இது தொடர்பில் தவறான பிரசாரங்களில் ஈடுபட வேண்டாம். இதனை அவசரத்தில் மேற்கொள்ள முடியாது.- என்று தெரிவித்தார். (ப)

## வயல்களில் கட்டடம் அமைக்கும் பணி நிறுத்தக்கோரி மக்கள் போராட்டம்!





மட்டக்களப்பு,ஜன.12

மட்டக்களப்பு - திருப்பெருந்துறை, கொத்துக்குளம் மாரியம்மன் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

வயல்காணிகள் நிரப்பப்பட்டு கட்டடங்கள் அமைக்கும் பணிகளை நிறுத்துமாறு கோரியே நேற்றுமுன்தினம் காலை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்–

வயல் காணிகளை மூடுவதற்கு அரசாங்கம் தடைகளை விதித்துள்ள போதிலும் அவற்றையெல்லாம் மீறி இந்தப் பகுதியில் வயல் காணி மூடப்பட்டு கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் அடிப்படையில் விவசாய காணிகள்

விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த காணியை நிரப்புவதற்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். அக் காணி நிரப்பப்படுமானால் அப்பகுதியில் உள்ள ஏனைய விவசாயிகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

இவ் விடயம் தொடர்பில் 2016ஆம் ஆண்டு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் இதுவரையில் இந்த விடயம் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமாரிடம் மகஜர் ஒன்றும் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ராணுவத்தின் வசமிருந்த காணிகளில் 80 வீதம் விடுவிப்பு!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

வடக்கில் இராணுவத்தின் வசமிருந்த காணிகளில் 80 சதவீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த மூன்றாண்டு காலத்தில் அரசு அமுலாக்கிய வேலைத்திட்டங்கள் திருப்தி அடைய முடியும்.

இலங்கை அரசின் நல்லிணக்க வேலைத்திட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு ஒளிபரப்பான தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பொருளாதார அபிவிருத்தி முக்கியமானது. தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரத்தைச் சீர்குலைக்காமல், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது முக்கியமானதாகும் .

அரசு நீதித்துறையின் நடுநிலையைப்பாதுகாப்பதால், சர்வதேச மனித உரிமை பேரவையின் நிலைமையை சாதகமாக மாற்ற முடிந்துள்ளது.

வடக்கில் இராணுவத்தின் வசமிருந்த காணிகளில்80சதவீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும், தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்பு பற்றியும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

சமகாலத்தில் தூய்மையான தேசிய அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்பும் தேவை உள்ளது. இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சீரான ஒழுக்கத்துடன் கட்டுக்கோப்பாக செயற்படுகிறது. சிறந்த முன் உதாரணங்களுடன் நேர்மையான அரசியல்வாதிகள் உருவாகின்றமை அவசியம்.

எதிர்வரும் தேர்தல்களில் தூய்மையான அரசியல்வாதிகளைத் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கின்றமை வாக்காளர்களின் பொறுப்பாகும்.

ஜனாதிபதி என்ற ரீதியிலும், அரசியல் கட்சியின் தலைவர் என்ற ரீதியிலும் தேர்தல் சட்ட திட்டங்களையும், ஆலோசனைகளையும் முறையாக அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதியான, நியாயமான தேர்தலை நடத்த வழிவகுப்பது இதன் நோக்கம்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் அரசு அமுலாக்கிய வேலைத்திட்டங்கள் குறித்து திருப்தி அடைய முடியும். இலங்கை அரசின் நல்லிணக்க வேலைத்திட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதன் காரணமாக உலக நாடுகள் இலங்கை மீது நம்பிக்கை வைத்து ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. இலங்கை நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையை அனுசரித்து வருகிறது. இதன் காரணமாக கூடுதல் அனுகூலங்கள் கிடைத்து வருகின்றன.

இவ்வாண்டு பெருந்தொகை கடனை மீளச் செலுத்த வேண்டியிருக்கிறது. இது தொடர்பான சவால்களைச் சிறப்பாகச் சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். முன்னைய காலங்களில் எழுந்த சில சவால்களை வெற்றி கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டது.



பிரச்சினைகளின் பின்புலத்தில் அரசியல் சக்திகள் இயங்கியமை இதற்குக் காரணமாகும். சமகாலத்தில் நாட்டில் சுதந்திரமும், ஜனநாயகமும் நிலவுகிறது.

இதன் காரணமாக எவரும் சுதந்திரமாக கருத்து வெளியிட முடியும். அரசு எப்போதும் இலவச கல்வியை வலுப் படுத்தும் தனியார் கல்விக்கும் பரந்த வாய்ப்பு வழங்கப் படுகிறது.

ஊழல் மோசடி விசாரணைகளில் குறைபாடுகள் இருந்தாலும், அதில் பெரும் முன்னேற் றம் உள்ளது. நீதி மன்றங்கள் சுயாதீனமாக இயங்குகின்றன. சட்டவாட்சியை வலுப்படுத்திய நாடென்ற ரீதியில் முன்னேறிச் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

எதிர்கால சந்ததிக்காக சிறந்ததொரு நாட்டைக் கட்டியெழுப்ப சகலரதும் அர்ப் பணிப்பு அவசியம் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மேலும் குறிப்பிட்டார். (க)

## வடக்கிலும் ஓரளவு மழை பெய்யக் கூடிய வாய்ப்பு

நாட்டின் கிழக்கு , ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவ மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமாகாணம் மற்றும் அநுராதபுர மாவட்டத்தில் ஓரளவு மழைபெய்யும். பிற்பகல் 2.00 மணியின் பின்னர் பல மாகாணங்களின் சில பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளைகளில் பனிமூட்டம் காணப்படக்கூடும் என்று திணைக் களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து காங்கேசன்துறை ஊடாக மன்னார் வரையிலான கடற்கரை பகுதிகளில் ஓரளவு மழை பெய்யும். ஏனைய கடற் கரையோர பிரதேசங்களில் மாலை மற்றும் இரவு வேளைகளில் மழை அல்லது இடியு டன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இடியுடன்கூடிய மழையின்போதுதற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாக செயற் படுமாறு திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

## கனேமுல்ல மேம்பாலம் மக்களிடம் கையளிப்பு!



கொழும்பு, ஜன. 12

கம்பஹா மாவட்டத்தில் உள்ள முக்கிய வர்த்தக நகரமான கனேமுல்ல மேம்பாலம் நேற்று பொதுமக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

உயர்கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல வின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ரயில் நிலையத்தின் காரணமாக கனேமுல்ல நகரத்தில் அடிக்கடி ஏற் படும் வாகன நெரிசலுக்கு தீர்வாக இந்த பாலம் அமைக்கப் பட்டுள்ளது.

ஸ்பெயின் அரசின் நிதியுதவியின் கீழ் 170 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தொகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் 504 மீற்றர்களாகும்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இதற்கான அடிக்கல் நட்டப்பட்டது. 20 மாத காலத்திற்குள் இதன் நிர் மாணப்பணிகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கூட்டு எதிர்க்கட்சி 5 உறுப்பினர்களின் சு. க. உறுப்புரிமையை நீக்க முயற்சி!

### – கெஹலிய



கூட்டு எதிர்க்கட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் ஐவரின் கட்சி உறுப்புரிமையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்மூலம், எதிர்காலத்தில் ஏனைய உறுப்பினர்களின் உறுப்புரிமையும் நீக்கப்படும் என மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 8 இலங்கையருக்கு சீஷெல்ஸ் நீதிமன்றம் விளக்கமறியல்!

கொழும்பு, ஜன. 12

கடற்புற எல்லைக்குள் புகுந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதான எட்டு இலங்கை மீனவர்களை, மேலும் பத்து நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க சீஷெல்ஸ் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சீஷெல்ஸுக்குச் சொந்தமான டெனிஸ் தீவுக்கு அருகில் கடந்த 20ஆம் திகதி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோதே இந்த மீனவர்கள் எட்டுப் பேரும் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாட்டு மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிப் பிரச்சினை சீஷெல்ஸில் வழமையானது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதமும் ஐந்து இலங்கை மீனவர்கள் அடங்கிய படகொன்று சீஷெல்ஸினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகைகளுடன் சென்ற லொறி விபத்து

கொழும்பு, ஜன. 12

கொழும்பிலிருந்து நுவரெலியாவிற்கு பத்திரிகைகளை ஏற்றிச்சென்ற லொறி யொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.



நேற்றுக் காலை 6 மணியளவில் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை சுரங்கப்பாதைக்கு அருகில் இந்த விபத்து இடம் பெற்றது.

லொறியின் சாரதிக்கு தூக்க மயக்கம் ஏற்பட்டதன் காரணமாக லொறி வீதியை விட்டு விலகி கற்பாறையின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது எனதிம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த லொறியில் சாரதியோடு உதவியாளரும் பயணித்துள்ளார். சிறு சிறு காயங்களுடன் உயிர் தப்பிய இவர்கள் பத்திரிகைகளைவேறொரு லொறிக்கு மாற்றம் செய்து அனுப்பி வைத்துள்ளனர்.

அத்தோடு, வீதி போக்குவரத்துக்கான பாதுகாப்பு சமிஞ்கைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெருந்தொகையான கொக்கெய்ன் போதைப் பொருளை அழிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 12

கடந்த காலங்களில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் ஊடாக கைப்பற்றப்பட்ட கொக்கெய்ன் போதைப் பொருளை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ்போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் ஊடாகக் கைப்பற்றப்பட்ட 900 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப் பொருளே இவ்வாறு அழிக்கப் படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி கட்டுநாயக்கவில் வைத்து இந்தப் போதைப்பொருள் அழிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# முதலமைச்சரின் பிரிசுக்கு மறுப்பு; தமிழ் அதிபருக்கு நேர்ந்த அவலம்

தனது உத்தரவைப் புறக்கணித்த தமிழ்மொழி மூல பெண்கள் பாடசாலை அதிபர் ஒருவரை, ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, முழங்காலில் நின்று, மன்னிப்புக் கேட்க வைத்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்ட ஊவா மாகாண முதலமைச்சருக்கு எதிராக கல்வி அமைச்சின் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்பு (கபே) கோரிக்கை விடுத்துள்ளது.

பதுளையில் உள்ள தமிழ் மொழி மூல பெண்கள் பாடசாலை ஒன்றின் அதிபரை தமது அதிகாரபூர்வ இல்லத்துக்கு அழைத்த ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, முழங்காலில் நின்று வணங்கி மன்னிப்புக் கோர வைத்துள்ளார்.

தாம் அனுப்பிய மாணவி ஒருவருக்கு பாடசாலையில் இடமளிக்காதமைக்காகவே, பாடசாலை அதிபருக்கு ஊவா முதலமைச்சர் இந்தத் தண்டனையை வழங்கியுள்ளார்.

முதலமைச்சரின் பரிந்துரைக் கடிதத்துடன் பாடசாலைக்குச் சென்று மாணவியின் பெற்றோர், அனுமதி கோரிய போதிலும், கல்வி அமைச்சின் உத்தரவுகளுக்கு அமையவே தான் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும் என்று அதிபர் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற முதலமைச்சர், அதிபரை அழைத்து முழந்தாளிட வைத்து மன்னிப்புக் கோர வைத்துள்ளார் என்று கபே நிறைவேற்றுப் பணிப்பாளர்



கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சியில் இதேபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. இதுபோன்ற சம்பவங்கள் நடக்காது என்று வாக்குறுதி கொடுத்து பதவிக்கு வந்த தற்போதைய அரசிலும் இத்தகைய சம்பவங்கள் தொடர்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

# தினசரி ராசி பலன் (12.01.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஏகாதசித்திதி. இரவு 9.23மணி வரை பின்னர் துவாததி. நட்சத்திரம். விசாகம் காலை 7.27 வரை பின்னர் அனுஷம் மரணயோகம் இரவு 9.23 வரை பின்னர் சுபயோகம்*

**ராகுகாலம்** - *பகல் 10.52மணி முதல் 12.18மணி வரை*

**சுபநேரம்** - *காலை 6.36மணி முதல்8.06மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மார்கழி மாத தேய்பிறை ஏகாதசி* **பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அனுஷம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சஞ்சலமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்ப ஒற்றுமை குறையும். கடன் பிரச்சினை அதிகரிக்கும். வியாபாரத் தொழிலில் தொய்வு நிலை உண்டாகும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் தடை தாமதம் நிலவக் கூடும். தொழிற் பிரிவில் தங்கள் தொழில் வளர்ச்சிக்காக பொருள்களை கடன் வாங்காமல் இருப்பது நல்லது.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வீடு மாற்றம், உத்தியோக உயர்வு என்பன கிடைக்கும். வழக்குகள் வெற்றி உண்டாகும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் உண்டாகும்.

**கடகம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். வீடு வாகனம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும். அரச வழியால் நன்மைகள் உண்டாகும்.

**சிம்மம்** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். உடல் நோய் வாய்ப்படும். பிரச்சினைகளால் கவலைகள் உண்டாகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி** மத்திமமான நாள். பொருள் வரவு சுமாராக இருக்கும் குடும்பத்தில் நன்மைகளும் தொல்லைகளும் மாறி மாறி வரும். கொடுக்கல் வாங்கலில் அவதானமாய் இருக்க வேண்டும்.

**துலாம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். செய் தொழிலில் முன்னேற்றமும் வருமானமும் அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெளிநாடு செல்லும் குருட்டு அதிஷ்டம் தேடி வரும். திருமணமாகாதோருக்கு அதற்கான வாய்ப்பு வலிய வரும்.

**தனுசு** சலனம் மிகுந்த நாள். மனக் குழப்பம் கவலை அதிகரிக்கும். எல்லாக் காரியங்களிலும், எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உடலில் ரோகங்கள் உண்டாகும்.

**மகரம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஒற்றுமை மேலோங்கும். பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். சகோதர உறவு பலப்படும். வீடு வாகன வசதிகள் பெருகும்.

**கும்பம்** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். குடும்ப உறவில் நல்லிணக்கம் உண்டாகும். வர்த்தகம் அமோக லாபம் தரும். மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள்.

**மீனம்** விருத்தியான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் நெருக்கம் பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு பெரும் புகழும் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களின் திறமை பளிச்சிடும்

**சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்களைத் தவிர்க்கவும்.**

# வீடு சென்று கலைஞர்கள் கௌரவிப்பு



''கலைஞர் சுவதம்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூத்த கலைஞர்களை அவரவர் இல்லம் சென்று புதுவருட வாழ்த்தைத் தெரிவித்து ''கலைக்குரிசில்'' விருது வழங்கி சந்தோஷப்படுத்தும் நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பொ.தயானந்தன், யாழ. மாவட்ட செயலக கலசார உத்தியோகத்தர் மற்றும் யாழ்.பிரதேச செயலக கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இயலாமையிலுள்ள மூத்தவர்கள் 10 பேர் இவ்வருடம் கௌரவிக்கப்பட்டனர். (இ-19)

# நாளை மின் தடை

சனி காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ் பிரதேசத்தில் ஊறணி, இலந்தைக்காடு, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, பொலிகண்டி ஐஸ்தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# கொழும்பு – வனாத்துவில்லு விசேட அதிவேக ரயில் பாதை



கொழும்பு, ஜன. 12

கொழும்பில் இருந்து புத்தளம்-வனாத்துவில்லு வரையில் அதிவேகரயில் பாதை அமைக்கப்படவுள்ளது என நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த ரயில் பாதைக்கு அமைவாக மாஹோ ரயில் நிலையத்தில் இருந்து ஆனமடுவ ஊடாக நுரைச்சோலை வரையிலான கிளை ரயில் பாதையொன்று அமைக்கப் படவுள்ளது.

இதற்கான சாத்திய கூற்று அறிக்கைகள் தயாரிக்கப்பட வுள்ளன.

கொழும்பு - புத்தளம், ஆனமடுவ - மாஹோ ஊடாக திருகோணமலை வரை அதிவேக ரயில் பாதையை அமைக்கும் நீண்ட காலத்திட்டத்தின்கீழ் இது அமுலாகிறது.

இதன் மூலம் ஆனமடுவ உட்பட்ட புறநகர்ப் பிரதேசங்களுக்கு பொருளாதார ரீதியில் பல்வேறு நன்மைகள் கிடைக்குமென இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir







# தமிழர்களின் வரலாற்றை ஆவணப்படுத்திய பெருமைக்குரிய மாமனிதர் ‘கலைஞானி’

## நினைவு தின நிகழ்வில் உரை

கலைஞானியின் பணி வரலாற்றுத் தேடல் முயற்சி அவர் தனது அறிவு, ஆளுமைச்சிறப்பு காரணமாக தமிழர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தினார். அவரின் பணிகளின் பரிமாணங்களை அறிந்து மாமனிதர் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

குரும்பசிட்டி கலைஞானி அ.செல்வரத்தினம் அவர்களின் 16ஆவது ஆண்டுநினைவுதினம் அண்மையில் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி தலைமையில் நடைபெற்றபோது அங்கு நினைவுரையாற்றிய வழக்கறிஞர் பொன். பூலோக சிங்கம் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து இடம்பெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர். குரும்பசிட்டி கிராமம் இலக்கிய செழுமை மிக்கது. தமிழ் பண்பாடு, கலை நிறைந்த பூமி. பொன்.பரமானந்தர், கனக செந்திநாதன் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, கலாகேசரி தம்பித்துரை, பொன்.பாலகுமார், கவிஞர் கந்தவனம், போன்ற பெரியோர் நடமாடிய இம்மண்ணிலே கலைஞானி அவர்களின் பணிகளும் பல்கிப்பெருகின. பொன்.பரமானந்தர் பண்படுத்திய இம்மண்ணிலே கலைஞானியின் பணி வரலாற்றுப் பெருமைமிக்கதாக விளங்குகிறது.

தமிழர்களின் வரலாற்றுக் கருவூலங்களைத் தேடி பாண்டியன்குளம், துணுக்காய், வன்னிக்குளம் போன்ற இடங்களுக்கும் சென்று ஆய்வு செய்த கலைஞானியைப் பற்றி இன்று அங்கு செல்லும் போது மக்கள் ஆர்வத்தோடு விசாரித்து அறிவதைப் பார்த்திருக்கிறேன். தன் வாழ்க்கை முழுவதையும் இப்பணிக்காக அர்பணித்த அவர் சிறந்த புகைப்பட கலைஞராகவும் விளங்கினார்.

குரும்பசிட்டியின் வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டும். இன்றைய இளம்சந்ததியிடம் பெரியோர்கள் பற்றிய அறிவு குறைவாக உள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான பெரியார்களின் நினைவு தினங்களை இளைஞர்களின் பங்குபற்றலோடு கொண்டாட வேண்டும். கலைஞானியின் கனவு நனவாக வேண்டும்.– என்றார்.

வேதாந்த மடத்தின் பீடாதிபதி வேதவித்தியாசாகர சுவாமிகளின் முன்னிலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஓய்வு நிலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, சிவ.ஆறுமுகசாமி, காந்தி சேவா சங்கத்தைச் சேர்ந்த கா.கார்த்திகேசு ஆகியோரும் உரையாற்றினர். மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ

# இந்தியா செல்கிறார் வெளிவிவகார அமைச்சர்!



கொழும்பு, ஜன. 12

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பீகார் மாநிலத்தில் உள்ள ராஜ்கிர் நகரில் நேற்று ஆரம்பமான தர்ம தம்ம மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுவதற்காகவே இலங்கை வெளி விவகார அமைச்சர் திலக் மாரப்பன இந்தியா செல்லவுள்ளார்.

நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

நேற்று பிற்பகல் 3 மணிக்கு இந்த மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பிரதம விருந்தினராகப் பங்கேற்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக, இலங்கை வெளி விவகார அமைச்சர் திலக் மாரப்பன, பீகார் மாநில ஆளுநர் சத்யபால் மாலிக், பீகார் மாநில முதலமைச்சர் நிதீஸ்குமார், இந்திய வெளி விவகார அமைச்சின் கிழக்குப் பிராந்தியத்துக்கான செயலர் பிரீதி சரன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் திலக் மாரப்பன இந்தியாவுக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இதுவாகும். (க)





# சைட்டத்தை உடனடியாக மூடுமாறு கோரி கிழக்குப் பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜன.12

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் பெயரை மாற்றி பதிவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் கண்டித்தும், சைட்டத்தை உடனடியாக மூடிவிட வேண்டுமெனக் கோரியும், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக முன்றிலில் நேற்று இடம்பெற்றது.

பல்கலை விடுதி பகுதியிலிருந்து மாணவர்கள் புறப்பட்டு ஊர்வலமாக வந்து, பிரதான வீதியோரம் நின்று, எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியுள்ளனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்–

மருத்துவப் படிப்பைப் பணத்துக்கு விற்பனை செய்தால், பணம் படைத்தவர்களுக்கு வழங்கும் சலுகையாகவே அமையும்.

ஏழைகளைக் காப்பற்றுவதற்கும் எமது பெற்றோர், மாணவர்களைக் காப்பாற்றுவதற்கும் சைட்டத்தை உடனடியாகத் தடை செய்யுங்கள் என்று தெரிவித்தார்கள். (ப)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் சாவு!

மட்டக்களப்பு,ஜன.12

மட்டக்களப்பு – கரடியனாறு, கார்மலைப் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பெண்கள் பாடசாலை வீதியைச் சேர்ந்த 56 வயதுடைய, சின்னலெப்பை நூர்முஹம்மது (மாலையர் சின்னத்தம்பி) என்பவரே இதில் உயிரிழந்தவராவார்.

இந்த விவசாயி, மாடுகளைப் பராமரிப்பதற்கான பொருள்களை வாங்கிக் கொண்டு கார்மலைப்பகுதிக்கு சென்றவேளை காடுகளுக்குள் இருந்து வந்த யானைகளில் ஒன்று தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

# சிதம்பரம் கப்பல் பயணம்; ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி

## இலங்கை முதலுதவிச் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

தமிழ்நாடு சிதம்பரம் நடராஜப்பெருமானைத் தரிசிக்க வசதியாக கப்பல் பயணத்துக்கு முயற்சிகளை மேற்கொண்ட மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயாவுக்கும்–

இந்த முயற்சிக்கு அனுமதி வழங்கிய யாழ்.இந்திய துணைத் தூதுவர், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் இந்தப்பணியைச்செயற்படுத்திக்கொண்டிருக்கும் இந்து சமய கலாசாரத் திணைக்களத்திற்கும் இலங்கை முதலுதவி சங்கத்தின் ஆணையாளர் வி.மோகனதாஸ் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சிதம்பர தரிசனத்திற்கு தயாராகும் பக்தர்கள் யாழ். கச்சேரிக்கு முன்பாக உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கும் இந்து சமய கலாசார திணைக்களத்தில் கடவுச்சீட்டுடன் வருகைதந்து விரைவாகப் பதிவை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு– 0714402318



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் எடுக்கப்பட்ட படம். மாணவர் முதல்வர் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவில் முதன்மை விருந்தினராக பவள விழாக் கண்ட வித்தியாலயத்தின் செல்வி.தங்கப்பொன் கனகசபாபதி கலந்து கொண்டார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

397

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

வட கொரியாவுக்கு எதிரான ஒரு போரானது, வட கொரிய எல்லையின் இருதரப்பிலும் குறைந்தபட்சம் நூறாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் உயிரிழப்புகளுடன், கருதத்தக்க வகையில் ஒவ்வொரு சூழலிலும் அமெரிக்காவுக்கு அளவிட முடியாத ஒரு பேரழிவாக இருக்கும். இது போன்றவொரு போர் அமெரிக்காவை சர்வதேச அரங்கில் அந்நியப்படுத்தி, வொஷிங்டனின் அந்தஸ்தில் என்ன எஞ்சியிருக்கிறதோ அதையும் தகர்த்தெறியும்.

**ஈராக் படையெடுப்பைக் காட்டிலும் மிக பேரழிவுகரமான ஒரு போராக சுற்றிச்சூழ அச்சுறுத்துகின்ற, வடகொரியாவை நோக்கிய இந்த அதிகரித்தளவிலான போர்வெறி கொண்ட நிலைப்பாடு, ஒரு வெள்ளை மாளிகை அரண்மனை சதியின் சாத்தியப்பாடு மீதான ஊகங்களுக்கு உந்துசக்தியாக உள்ளது.**

Foreign Affairs இதழின் சமீபத்திய பதிப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரையில், Scott D. Sagan, வட கொரியா உடனான சாத்தியமான ஒரு பேரழிவுகரமான போரைத் தவிர்ப்பது, இராணுவத்தின் பிரிவுகளால் ட்ரம்பைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான கணிசமான தூண்டுதலை முன்வைக்கக்கூடுமென எச்சரிக்கிறார்.





வட கொரியா உடனான அமெரிக்காவின் விட்டுக்கொடுப்பற்ற நிலை, சில விதத்தில், கியூப ஏவுகணை நெருக்கடியை விடவும் மிக அபாயகரமானதென சாகன் குறிப்பிடுகிறார், அப்போது 'உறுதியான படைத்துறை சாரா தலைவர்கள் அமெரிக்க இராணுவத்தின் அபாயகரமான போர்வெறி உணர்வை எதிர்த்தனர்.' ஆனால் இப்போதோ, 'அமெரிக்காவில் உள்ள மூத்த அரசியல் தலைமையே பொறுப்பற்ற அச்சுறுத்தல்களை விடுக்கிறது, மேலும் (ஒரு முன்னாள் தளபதியான) பாதுகாப்புத்துறை செயலர் ஜேம்ஸ் மாட்டீஸ் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளின் குரல்களே அச்சுறுத்த சேவையாற்றுகின்றன.'

அவர் இதையும் சேர்த்துக்கொள்கிறார், 'ட்ரம்ப் தடுக்கப்படுவதாக ஏதேனும் தருணத்தில் மூத்த இராணுவத் தலைவர்கள் நம்புகையில், அவர்கள் மாட்டீஸைத் தொடர்பு கொள்ள கடமைப்பட்டுள்ளனர், பின்னர் இவர் ட்ரம்ப் ஆல் 'அவர் பதவியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்ற' இயலவில்லையா, 25 ஆவது அரசமைப்பு திருத்தத்தைப் பயன்படுத்தலாமா வேண்டாமா' என்பதைத் தீர்மானிக்க அவசர கால மந்திரிசபை கூட்ட அழைப்பு விடுக்க வேண்டும்.'

அமெரிக்க இராணுவ தலைமை பசிபிக்கில் ட்ரம்ப் நிர்வாகத்தின் போர் முனைவைத் தடுக்க ஏதேனும் விதத்தில் சேவையாற்றும் என்று நினைப்பது விரும்பத்தக்க சிந்தனையாக இருந்தாலும், இதுபோன்றவோர் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பு சதியின் அபாயம் குறித்து யாரும் குறைமதிப்பீடு செய்துவிட முடியாது. பாதுகாப்புத்துறை செயலர் 'போர் வெறியர்' மாட்டீஸ், ஒரு போர் 'அதன் வடகொரியாவின் மக்களை நிர்மூலமாக்க' இட்டுச் செல்லும் என்று எச்சரித்து, வட கொரியாவுக்கு எதிராக மனிதயினப் படுகொலையைக் கொண்டு அச்சுறுத்தி உள்ளார். தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் எச்.ஆர். மெக்மாஸ்டரும் இதேபோல, அமெரிக்கா வட கொரியாவுக்கு எதிராக ஒரு 'முன்கூட்டிய', அதாவது தூண்டுதலற்ற, போரைத் தொடங்க தயாரிப்புச் செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

**அமெரிக்கா முன்னொரு போதும் இல்லாதளவில் அதிவிரைவாக இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய அதன் மேலாதிக்கம் உடைந்து வருவதை முகங்கொடுக்கின்ற நிலையில், அது ட்ரம்ப் நிர்வாகத்தின் அச்சுறுத்தல்களை நிரூபித்துக் காட்டுவதற்காகவே கூடப் போரில் இறங்கலாம்.**

இதற்கிடையே பதவி நீக்க குற்ற விசாரணை மூலமாக ட்ரம்பை நீக்குவது இராஜினாமா செய்ய நிர்ப்பந்திப்பது அல்லது 25 ஆம் அரசமைப்பு சட்டத் திருத்தத்தைப் பயன்படுத்துவது என இவற்றின் மீது அதிகரித்து வரும் பேச்சுக்கள், அமெரிக்காவைப் பீடித்து வருகின்ற உள் நாட்டு அரசியல் நெருக்கடியைப் போரைக் கொண்டு தீர்க்க முனைய நிர்வாகத்தின் மீது அழுத்தத்தை அதிகரிக்கிறது.

இவை அனைத்துமே அமெரிக்க அணுஆயுத விட்டுக்கொடுப்பற்ற நிலையால் முன்னிறுத்தப்பட்ட ஆழ்ந்த அபாயத்தை அடிக்கோடிடுகின்றன. வடகொரியா உடனான ஒரு போரின் அவசியம் குறித்து அமெரிக்க ஆளும் உயரடுக்கின் வெவ்வேறு கன்னைகளுக்கு இடையே கருத்து வேறுபாடு நிலவினாலும், அங்கே ஆளும் உயரடுக்கிற்குள் போர் எதிர்ப்பு கன்னை எதுவும் இல்லை. ட்ரம்பை எதிர்க்கும் கன்னைகள் கோருகின்ற கொள்கை -அதாவது, ரஷ்யாவுடனான மோதலைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பது-முற்றுமுழுமையான உலக போருக்குள் தீவிரப்படுத்தும் அதன் சொந்த அபாயத்தைக் கொண்டுள்ளது.

அதிகரித்து வரும் போர் அபாயத்தைக் குறித்து எச்சரிப்பதற்கு பதிலாக, ஜனநாயகக் கட்சி கடந்த இரண்டு வாரங்களாக ட்ரம்ப் நிர்வாகம் ரஷ்யாவுடன் நயவஞ்சகமாகக் கூட்டு வைத்திருந்தது என்று கூறப்படுவதன் மீதான அதன் பிரசாரத்தைத் தீவிரப்படுத்துவதில் செலவிட்டுள்ளது. அதே நேரத்தில் அது, ட்ரம்ப் நிர்வாகத்துடனான அதன் மோதலுக்காக உயர்மட்ட நடுத்தர வர்க்க அடுக்கை அணி திரட்டும் நோக்கில், ஹொலிவுட்டில் மற்றும் கேப்பிட்டல் ஹில் மீதும் 'பாலியல் முறைகேடுக்கு' எதிரான அதன் வேட்டையாடலுடன் பொது மக்களின் நனவை சிதைக்கவும் செயற்பட்டு வருகிறது.

பேரழிவுகரமான மூன்றாம் உலகப் போர் ஒன்றைத் தடுக்கும் தகைமை கொண்ட ஒரே சமூக சக்தி, சர்வதேச தொழிலாள வர்க்கம் மட்டுமே ஆகும். இந்த சமூக சக்தி, போருக்கும் மற்றும் அதை உருவாக்கும் முதலாளித்துவ அமைப்புமுறைக்கும் முடிவு கட்டும் நோக்கில், ஒரு சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில், ஒரு பெரிய சர்வதேச போர் எதிர்ப்பு இயக்கத்திற்குள் அணி திரட்டப்பட வேண்டும்.

**'போருக்கு ஆயத்தப் படுத்தப்பட்ட அமெரிக்க ஆயுதப் படைகளின் நிலை நிறுத்தல்கள் குறித்து காங்கிரஸிற்கு தகவல் அளிப்பதற்காக', பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் பௌல் ரெயன் மற்றும் செனட்டின் மிகமுக்கிய தலைவர் ஓரின் ஹாட்ச் ஆல் உரையாற்றப்பட்ட 'போர் அதிகாரங்கள்' கடிதம் (War Powers) என்றழைக்கப்படும் ஒன்றை அண்மையில் ட்ரம்ப் வெள்ளை மாளிகை வெளியிட்டது.**

1973 இல், வியட்நாம் போர் தோல்விக்குப் பின்புலத்தில், அமெரிக்க காங்கிரஸ், அப்போதைய ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனின் வீட்டோ அதிகாரத்தை ஒதுக்கி விட்டு, போர் அதிகார சட்டத்தை (War Powers Act) நிறைவேற்றியது. காங்கிரஸைக் கணக்கில் கொள்ளாமல் அல்லது ஏதோ சிறிது கணக்கில் கொண்டவாறு, அறிவிக்கப்படாத மற்றும் பகிரங்கமான போர்களைத் தொடுப்பதில் இருந்து எதிர்கால ஜனாதிபதிகளைத் தடுப்பதே அச்சட்ட பிரேரணையின் நோக்கமாக இருந்தது, அமெரிக்க அரசமைப்பின் கீழ் போரை அறிவிக்க காங்கிரஸிற்குப் பிரத்தியேக அதிகாரம் உள்ளது.


ஜனாதிபதி அவர் விருப்பப்படி 60 நாள்கள் வரையில் இராணுவ படைகளைப் பயன்படுத்துவதற்கு அது உரிமை வழங்கியது - இதுவே கூட நிர்வாக பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒரு மிகப்பெரும் அதிகார விட்டுக்கொடுப்பு தான் என்றாலும்- காங்கிரஸ் அந்த இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் வழங்கத் தவறினால், மொத்தம் 90 நாள்களுக்குள் அந்நடவடிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக இருந்தது.



(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 64



## பிரபாகரனைச் சந்தித்தேன்

### மறக்க முடியாத கவிஞர்கள்

எமது முதற் கம்பன் விழா கவியரங்கில் அருட்கவி சி.விநாசித்தம்பி அவர்கள் கவிதை பாடினார். வரகவியாகக் கவிதை பாடும் வல்லமை பெற்றவர் அவர். நிறைந்த அருளாளர். கடைசி வரை என் மேலும் கழகத்தின் மேலும் பெரிய அன்பு பாராட்டி வந்தார். இவர் போலவே கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களும், எங்கள் கவியரங்கத்தைப் பெரிதும் சிறப்பித்தவர். மிக எளிமையானவர். மிகப் பெரிய இரசிகர். எம்மை, கம்பன் பணியில் தூண்டி வளர்த்தவர்களில் இவரும் ஒருவர். அதேபோல கவிஞர் பா.சத்தியசீலன் அவர்களும், கழகக் கவியரங்கங்களைச் சிறப்பித்த கவிஞர்களுள் ஒருவராவார்.

எங்கள் கம்பன் அரங்கில் கவிதை பாடி இனங்காணப்பட்ட கவிஞர்களுள் நாக.சிவசிதம்பரமும் ஒருவன். இளைஞனான இவன், ஆரம்பகாலத்தில் எங்கள் கவியரங்கத்தில், ஆழமான கவிதைகள்பாடி சபையை இரசிக்கச் செய்தான். இடைக் காலத்தில் முற்போக்குச் சிந்தனை சார்ந்து சற்றுத் தூர நின்றாலும், எங்கள் மேல் கொண்ட அன்பில் குறைவின்றித் திகழ்ந்தான். பின்னாளில், கவிஞர்கள் பண்டிதர் பரந்தாமனும், பொன். கணேசமூர்த்தியும், நாவண்ணனும் தமது கவிதைகளால் எங்கள் கவியரங்குகளைச் சிறப்பித்தனர். கழக அரங்குகளைச் சிறப்பித்த இக்கவிஞர்களை மறக்க முடியாது.

★ ★ ★

### இசைநாடகம் (19.05.1991)

எமது பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடரின் மூன்றாம் நிகழ்ச்சியாக, இந்நிகழ்வு 1991 மே 19 இல், எமது கம்பன் கோட்ட மேல்மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் முதன்முதலாய் நம் பாரம்பரிய இசை நாடகக் கலைஞர்களைச் சந்தித்தேன். அவர்கள் ஆற்றல் என்னை வியப்பில் ஆழ்த்தியது. முறைப்படியான இசைக்கல்வி ஏதுமின்றியும், சுத்தமாக அவர்களுக்கு வாய்த்திருந்த இசைஞானம் கண்டு



இசைநாடகம் (19.05.1991)

அரியாலை செல்வரட்ணம் , செல்வராஜா, கனகரத்தினம்

வியந்தேன். இத்தனைக்கும் அவர்கள் சாதாரண கூலித் தொழிலாளர்கள். அக்காலத்தில் பெண் வேடமிட்டு நடித்து வந்த அரியாலை செல்வரட்ணம், இராஜபாட் வேடத்தில் நடித்து வந்த சண்டிலிப்பாய் சின்னச் செல்வராஜா, இணுவில் கனகரட்ணம் ஆகியோர் இந்நிகழ்வின் மூலம் எமக்கு நெருங்கிய உறவாயினர். இவர்களின் கலை, கற்றோர் அரங்கில் போற்றப் படாதிருந்தது.

அவர்கள் ஆற்றலை எங்கள் சபையில் அரங்கேற்ற நினைத்து இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தோம். அந்நிகழ்வில் கோவலன், பூதத்தம்பி, வள்ளி திருமணம், நல்லதங்காள், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயான காண்டம் ஆகிய நாடகங்களிலிருந்து முக்கிய பகுதிகளை இவர்கள் மேடையேற்றினர். சபையிற் பெருங்கூட்டம். வேஷங்கள் போடாமல் பெறுமனே இவர்கள் நடித்தும் அவர்கள் நடிப்பைக் கண்டு சபை கண்ணீர் விட்டது. அக்கலைஞர்களும் அச்சபையால் ஈர்க்கப்பட்டு எம்மேற் பெரும் நன்றி பாராட்டினர்.

★ ★ ★

### க.கனகசபை ஐயா

கொழும்புத்துறையைச் சேர்ந்த இவர், அரச உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர். இசை நாடகப் பிரியர். இசை நாடகக் கலைஞர்களைப் போஷித்து வந்தவர். அவர்களைச் சமூகத்தில் உயர்த்த வேண்டுமென நினைத்துப் பாடுபட்டவர். இசை நாடகக் கலைஞர்களை, தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். கழகம் அக்கலைஞர்களுக்குத் தந்த ஏற்றங் கண்டு எங்களோடு இணைந்தார். எங்கள்மேல் கொள்ளைப் பிரியம் வைத்திருந்தார். அவர் கழகத் தின் மேலும், என் மேலும் காட்டிய அன்பை என்றும் மறக்க முடியாது.

தற்செயலான ஒரு சந்தர்ப்பத்தில் தற்கொலைக்கு முயன்று, உயிருக்குப் போராடி வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த போது, அவரைச் சென்று பார்த்து, ‘‘எங்களுக்காக வாழ வேண்டுமென்று நினைத்திருக்க வேண்டுமல்லவா?’’ என்று கோபித்தேன். ‘‘நான் உயிர் தப்பி மீண்டும் கழகத்திற்தான் வந்திருப்பேன்’’ என்று சொல்லி அழுதார். அடுத்த நாள் மாண்டு போனார். அவரது இறுதிக் கிரியையில் கழகத்தார் அனைவரும் கலந்து கொண்டு, ஓர் உறவைப் பிரிந்தாற் போல் கண்ணீர் வடித்ததைக் கண்டு, அந்த ஊரே அதிசயித்தது.

★ ★ ★

## விடுதலைப் புலிகளின் மாத்தையாவைச் சந்தித்தோம்

இவ் இடைக்காலத்தில் கிட்டு கால்களை இழந்து இந்தியா சென்றுவிட, புலிகளின் தளபதியாய் மாத்தையா பொறுப்பேற்றிருந்தார். அவரோடு எங்களுக்கு நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. ஒருநாள் புதுவை என்னையும், திருநந்தகுமாரையும், மாத்தையாவிடம் அழைத்துச் சென்றார். திருநெல்வேலியில் இருந்த அவர்களது அலுவலகத்தில், அவரைச் சந்தித்தோம். எங்களை அழைத்துச் சென்ற புதுவை உள்ளே வராமல் வெளியிலேயே நின்று விட்டார். தனது உதவியாளரை வைத்துக் கொண்டு மாத்தையா எங்களோடு பேசினார். போராட்டத்தை விட, மக்கள் ஆலயங்களில் அதிக அக்கறை காட்டுவதாய்க் குறைபட்டார். நாங்கள் மக்களைப் போராட்டம் நோக்கித் திருப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அவரிடம் விடை பெற்றுத் திரும்பினோம். பின்னர் 1992 இல் ஆதீனத்தில் நடைபெற்ற எமது கம்பன் விழாவிற்கு தமது இயக்கச் சீருடையுடன் வந்து கலந்து கொண்டார்.

(தொடரும்...)



இசைநாடகம் (19.05.1991)

குழந்தை சண்முகலிங்கத்திடம் கௌரவம் பெறும் கனகசபை

ஏ.ரி.பி. யிடம் கௌரவம் பெறும் ஐங்கரநேசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பப் படிவம் 15 வரை!

கொழும்பு, ஜன. 12 இலங்கை மாணவர்களுக்குஇந்தியபல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொள்ள எதிர்வரும்15ஆம்திகதி வரை புலமைப்பரிசில் களுக்கான விண்ணப் பங்கள் ஏற்றுகொள்ளப் படவுள்ளன.

இந்திய அரசு அந்த நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பை மேற்கொள் வதற்காக 175 இலங்கை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை www.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

2018 - 2019 கல்வி ஆண்டுக்காக வழங்கப் படும் இந்தப் புல மைப்பரிசில் திட்டத் தின் கீழ் இலங்கை மாண வர்களால் இந்தியாவில் உள்ள பல்வேறு பல் கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற் கொள்ளமுடியும்.

இலங்கை - இந்திய கலாசார நட்புறவு பேரவையின் கீழான புலமைப்பரிசில் திட் டத்தின் கீழ் இவை வழங் கப்படவுள்ளன.

உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுடன் இணைந்து இந்திய அரசு இலங்கை மாணவர்களுக்குப் புல மைப்பரிசில்களைவழங்கு கின்றது.

மருத்துவக்கற்கைநெறி தவிர்ந்த விஞ்ஞானம், பொறியியல், வர்த்தகம், பொருளாதாரம், வணி கம், மனிதநேயம், கலை, கர்நாடகசங்கீதம், பரத நாட்டியம், காட்சி கலை கள் ஆகிய கற்கைநெறிக ளுக்காக நேரு ஞாப கார்த்த புலமைபரிசில் திட்டத்தின் கீழ் 100 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மருத்துவ கற்கை நெறி தவிர்ந்த விஞ்ஞானம், பொறியியல், வர்த்தகம், பொருளாதாரம், வணிகம் மனிதநேயம் மற்றும் கலை ஆகிய துறைகளில் முதுகலைப்பட்ட படிப்பைத் தொடர்வதற் காக மௌலானா அஸாட் புலமைப்பரிசில் திட்டத் தின் கீழ் 50 பேருக்கு புலமைப் பரிசில் வழங் கப்படவுள்ளன.

ராஜீவ் காந்தி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தகவல் தொழிநுட்பம் பி.ஈ பிடெக் IT/ B.E/ B.Tech ஆகிய துறை களில் இளம்கலை கற்கை நெறியைத் தொடர வதற்காக 25 மாணவர்க




ளுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளன.

புலமைப்பரிசிலைப் பெறும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கான கட்டணம், மாதாந்தக் கொடுப்பனவு, வரு டாந்த நூல்கள் மற்றும் காகிதாதிகளுக்கான செலவுகளும் வழங்கப் படுவதுடன் தெரிவு செய்யப்படும் மாண வர்களுக்கு விடுதி வசதி களும் வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# அநுராதபுரம் நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் திறந்து வைத்தார் ஜனாதிபதி மைத்திரி



சிறுநீரக நோய்ப் பரம்பலை கட்டுப்படுத் தும் நோக்கில் அநுராதபுரம் மாவட்டத்தின் சில பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளைத் திறந்து வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

அநுராதபுரம் மகாவுலன்குலம திப்பட்டு வாவ ஸ்ரீ விஜய விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திப்பட்டுவாவ ஸ்ரீ விஜய விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டார்.

பின்னர் பிரித் பாராயணம் செய்யப்படு கையில் விகாரையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தலாவ, பஹலதலாவ, கல்நேவ, திறப்பனே ஆகிய பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 10 நீர் சுத்திகரிப்புத் தொகுதிகளையும் தொலைதூர கட்டுப்பாட்டு தொழில்நுட்பத்தி னூடாகத் திறந்து வைத்தார்.

சிறுநீரக நோய் தொடர்பாக மக்களை தெளிவூட்டும் செயற்றிட்டம் சிறுநீரக நோய் நிவாரண ஜனாதிபதி செயலணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அமைச்சர் மஹிந்த அமரவீர, வடமத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திசாநாயக்க, முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, சிறு நீரக நோய் நிவாரண ஜனாதிபதி செயலணி யின் பணிப்பாளர் அசேல இத்தவெல உள் ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

# விமலுக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான விமல் வீரவன்ஸவிற்கு எதிராகக் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நீதிபதி விக்கும் களுஆராச்சி முன்னிலையில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸ அமைச்ச ராக இருந்த காலத்தில் அவ ரால் ஈட்டப்படாத சுமார் 7 கோடியே 50 லட்சம் ரூபா பணம் மற்றும் சொத்துக்க ளுக்கு உரிமை யாளராக இருந்த குற்றச்சாட் டின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் விமல் வீரவன்ஸ மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.


இந்த வழக்கு நேற்று பரிசீல னைக்கு எடுத்துக் கொண்ட போது, இந்தக் குற்றச்சாட்டுக் களில் தான் நிரபராதி என விமல் வீரவன்ஸ தெரிவித்துள் ளார்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்றம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளது.

# சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக சில்வா!

2018 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக் கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக, உதய ரொஹான் டி சில்வா மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை சட்டத் தரணி கள் சங்கத்தின் முன்னாள் தலை வரும், ஜனாதிபதி சட்டத்தரணி யுமாவார் என்பது குறிப்பிடத் தக்கது.



# தோட்ட பாதையை திருத்தித் தரக் கோரி வீதியில் கற்களைப் போட்டு ஆர்ப்பாட்டம்!

ஹட்டன் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட ஸ்டிரதன் தோட்ட பாதையை திருத்தித் தருமாறு கோரி நூற்றுக்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் மரங்களையும், கற்களையும் வீதியில் போட்டு நேற்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை உள்ள இப்பாதை பல வருட காலமாக குண்டும் குழி யுமாகக் காணப்படுகின்றது.

இதனால், வைத்தியசா லைக்கு கொண்டு செல்லும் போது சிறுமி ஒருவர் உயிரிழந் துள்ளார். கர்ப்பிணித்தாய் ஒரு வரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது வழியிலேயே குழந்தை பிரச வித்துள்ளார். பல தடவைகள் இந்த வீதியை திருத்தித் தருமாறு தோட்ட நிர்வாகத் திடம் கோரிக்கை விடுத்த போதிலும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததன் காரணமாக எதிர்ப்பு நடவடிக் கையில் ஈடுபட்டனர் என் றும் தொழிலாளர்கள் தெரிவிக் கின்றனர்.

# இராணுவ வீராங்கனைகள் மாலி பயணம்!



கொழும்பு, ஜன. 12 மாலியில் சகஜ நிலையை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட் டிருக்கும் ஐ.நாவின் பாது காப்புப் படையில் இணைந்து கொள்ளும் முகமாக, இலங்கை இராணுவ வீராங்கனைகள் பதினெட்டுப் பேர் நேற்று முன்தினம் மாலி நோக்கிப் புறப்பட்டனர்.

மாலியில் உள்ள ஐ.நா. படை யில் இணைந்து பணியாற்ற மொத்தம் 200 வீர, வீராங் கனைகளை அனுப்பிவைக்க இலங்கை முடிவுசெய்துள்ளது. இவர்கள், ஒரு வருட காலம் மாலியில் இருந்து பணியாற்ற வுள்ளனர்.

அதன்படி, இதுவரை மொத் தமாக 168 பேர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மீத முள்ள வர்கள் விரைவில் மாலி நோக்கிப் புறப்படவிருக் கின் றனர் என்றும் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

23\. எண் 130 இற்குப் பொருத்தமான மாதம் திகதி யாது?

1) மே 09    2) மே 10    3) மே 11

24\. இன்று வியாழக்கிழமை நேற்று முன்தினத்திற்கும் கடந்த வெள்ளிக்கிழமைக்கும் இடையே எத்தனை நாட்கள் இருந்தன?

1) 4    2) 3    3) 5

25\. கமலனிடம் 20 ரூபாய்த் தாள் காசாகவும் 50 ரூபாய்த் தாள் காசாகவும் ரூபா 360 உள்ளது. அதில் இருக்கத்தக்க இருபது ரூபாய்த் தாள் காசின் எண்ணிக்கை யாது?

1) 8    2) 15    3) 13

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

26\.

| 1) | 2) | 3) |
|---|---|---|
| கணனி<br>தொலைக்காட்சி<br>அரங்கு | பத்திரிகை<br>சுவரொட்டி<br>துண்டுப்பிரசுரம் | தொலைபேசி<br>தொலைநகல்<br>தந்தி |

27\.

| 1) | 2) | 3) |
|---|---|---|
| மலர்கள்<br>வளங்கள்<br>பழங்கள் | மனம்<br>கனம்<br>மணம் | மரம்<br>அறம்<br>பணம் |

**தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.**

சிந்திக்காத வரை
மூளை தலைக்குச் சுமை
பயன்படாத வரை
பணம் பெட்டிக்குச் சுமை
துணிவு இல்லாத வரை
பயம் வெற்றிக்குச் சுமை
உழைக்காத வரை
மனிதா நீ உனக்குச் சுமை

28\. இக்கவிதையில் கூறப்படுவது

1) பணம்    2) மூளை    3) சுமை

29\. தலைக்கு மூளை சுமையாய் இருப்பது

1) பயன்படாதவரை
2) உழைக்கும்வரை
3) சிந்திக்காதவரை


**சரியான விடையைத் தெரிவு செய்க.**

30\. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற பழமொழியின் கருத்து

1) விடாமுயற்சி பயன் தரும்
2) திறமையில் நம்பிக்கை
3) நம்பிக்கை காக்கும்

31\.







**கல்விக் கதிர் வெளியீடு**

**புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்**   வினாத்தாள் 3

தரம்-5   பிரபல ஆசிரியர்   பகுதி I   நேரம்- 45 நிமிடம்

**01. பின்வரும் வரிப்படத்தை அவதானித்து அருகிலுள்ள வினாக்களிற்கு விடையைத் தெரிவு செய்யுங்கள்.**





1\. உரு A, B, C ஆகியனவற்றிற்கு மட்டும் உரித்தான எண்கள் முறையே

1) 2, 1, 8    2) 8, 1, 2    3) 5, 1, 8

2\. உரு Bஇற்கு உரித்தான எண்களின் கூட்டுத்தொகை யாது?


1) 11    2) 17    3) 21

3\. பின்வரும் உருவில் உள்ள கோலத்திற்கு வெற்றுக்கூட்டில் இடப்பட வேண்டிய எண் யாது?




1) 6    2) 10    3) 9

4\. பின்வரும் உருவில் உள்ள கோலத்திற்கேற்ப A, B ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய எண்கள் முறையே





1) 12, 6
2) 7, 12
3) 12, 5

5\. செவ்வக வடிவான பூநாற்று மேடை ஒன்றின் நீளம் அதன் அகலத்தைப் போன்று 4 மடங்காகும். அதன் சுற்றளவு 40m எனின் அதன் நீள அகலம் முறையே


1) 10m, 4m    2) 20m, 5m    3) 16m, 4m

6\. தரப்பட்ட உருக்களில் உள்ள எண்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.




1) 24    2) 72    3) 30

7\.





1) 63    2) 31    3) 70




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பின்வரும் உருவில் உள்ள கோலத்திற்கேற்ப A, B ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய எண்களின் கூட்டுத்தொகை யாது?





1) 100
2) 30
3) 110

9. கீழ்வரும் தராசுகளின் அடிப்படையில் பாரம் குறைந்த கூடிய ஆங்கில எழுத்துக்கள் முறையே




1) A, C  2) B, A  3) A, D


10. வெற்றிடத்திற்கு வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.



..............................

1)  2)  3)


11.



..............................

1)  2)  3)

12.



எனின் ..............................

1)  2)  3)

13. இரண்டு முக்கோண முகங்களையும் மூன்று செவ்வக முகங்களையும் கொண்ட ஒரு திண்மம்
1) நான்முகி  2) கூம்பகம்  3) முக்கோண அரியம்



**தரம்-5 புலமைப்பரிசில் வினாத்தாள்கள் ஜன.07, 08**
**வெளியான வினாக்களுக்கு விடைகள் 2 ஆம் பக்கத்தில்**
நாளையும் விடைகள் வெளிவரும்

14. கமலன் வீட்டில் இருந்து வடக்குத் திசையாக 4m சென்று பின் கீழ்த்திசையாக 5m பயணம் செய்து திரும்பவும் வடக்குத் திசையாக 6m பயணம் செய்து பாடசாலையை அடைந்தான். பாடசாலை கமலனின் வீட்டிற்கு எத்திசையில் உள்ளது?
1) வடக்கு  2) கிழக்கு  3) வடகிழக்கு


15. குமாருக்கு இப்போது வயது 14 ஆண்டுகளாக இருக்கும்போது விமலனுக்கு வயது 10 ஆண்டுகளாகும். விமலனின் வயது குமாரின் வயதின் அரைமடங்காக இருந்தபோது விமலனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?
1) 4  2) 8  3) 6

16. ஒரு செவ்வக வடிவ மைதானத்தின் நீளம் 16m ஆகும். அதன் அகலம் நீளத்தின் அரைவாசியாகும். மைதானத்தைச் சுற்றி இரு சுற்று கம்பிவேலி அடிப்பதற்கான கம்பியின் நீளம் எத்தனை மீற்றர் ஆகும்?
1) 96m  2) 48m  3) 64m

17. நீர்த்தாங்கி ஒன்றில் நாளொன்றிற்கு 300ℓ நீர் வற்றுகின்றது. 2ℓ 400mℓ நீர் வற்றுவதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?
1) 6 நாட்கள்  2) 7 நாட்கள்  3) 8 நாட்கள்


18. கமலன், விமலன், குமார், பாலன் ஆகிய நால்வரும் ஒரு தொகுதிப் பொருட்களை சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர் என்பதைக் காட்டும் சரியான உரு யாது?

1)  2)  3)




19. X, Y, Z எனும் 3 பேர் தம்மிடையே இனிப்புக்களைப் பங்கிட்டுக் கொண்டனர். X உம் Y உம் பெற்றது Y உம் Z உம் பெற்றதிலும் குறைவு. X உம் Y உம் பெற்றது X உம் Z உம் பெற்றதிலும் குறைவு. மூவரும் அதிக இனிப்புக்களைப் பெற்றவர் யார்?
1) X  2) Y  3) Z

20. ஒரு வகுப்பில் A என்ற மாணவனுக்கு கிழக்குத் திசையில் B என்ற மாணவன் இருக்கிறான். B இற்கு வடக்குத் திசையில் C மாணவனும் C யிற்கு கிழக்குத் திசையில் D என்னும் மாணவனும் இருக்கிறான் எனின் அம்மாணவர்கள் இருக்கும் ஒழுங்கைச் சரியாகக் காட்டும் படம் யாது?




21. கீழ்வரும் உருவை அம்புக்குறி வழியே மடிக்கும்போது கிடைக்கும் உரு யாது?




22. அட்டவணையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப விடையைத் தெரிவு செய்க.

| நாள் | ஜனவரி 31 | பெப்ரவரி 29 | மார்ச் 31 | ஏப்ரல் 30 | மே 31 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 31 | 60 | 91 | 121 | ......... |

மே 31ம் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?
1) 151  2) 153  3) 152



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலந்தியைக் கொல்ல வீட்டை தீயிட்டு கொளுத்திய நபர்!



அமெரிக்காவின் கலி போர்னியாபகுதியில்சிலந் திப் பூச்சியைத் தீயிட்டு கொல்ல முயன்ற போது வீடு முழுவதும் எரிந்து நாசமாகியுள்ளது.

அமெரிக்காவின் கலி போர்னியாவில் லொஸ் ஏஞ்சல் பகுதியைச் சேர்ந்த ஒரு நபர் அடுக்கு மாடி குடியிருப்பில் வசிக் கிறார். அவரது வீட்டில் மிகப்பெரிய சிலந்தி பூச்சி இருந்தது.

அதை அடித்துக் கொல்ல முயன்றார். அது தப்பித்துக் கொண்டே இருந்தது. எனவே அதைத் தீயிட்டுக் கொல்ல முயன் றார்.

அப்போது அந்த தீ வீட் டில் இருந்த திரைச்சீலை யில் பிடித்து பொருள்கள் மீதும் பரவியது. பின்னர் தீ வீடு முழுவதும் பரவி யது. உடனே தீயணைப் புப் படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட் டது. அவர்கள் விரைந்து வந்து தீயைப் போராடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆனால் வீடு முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது.

# சிரியாவில் வான் தாக்குதல்; அப்பாவிகள் 24 பேர் சாவு!

## அவர்களில் 10 பேர் குழந்தைகள்

டமாஸ்கஸ்,ஜன.12

டமாஸ்கஸ் அருகே கிளர்ச்சியா ளர்கள் பகுதியைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் 10 குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் 24 பேர் கொன்று குவிக் கப்பட்டனர்.

சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கும், கிளர்ச்சிப்படை களுக்கும் இடையேயான உள் நாட்டுப்போர் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி தொடங் கியது. தொடர்ந்து 7 ஆண்டுக ளாகப் போர் நீடித்து வருகிறது. இந்தப் போரின்போது அப்பாவி மக்களும் கொன்று குவிக்கப்படு கின்றமை அங்கு தொடர் கதை ஆகி வருகிறது. இதுவரை உள் நாட்டுப் போரால் அங்கு ஒரு லட் சத்து 20 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். சுமார் 25 லட்சம் பேர் இடம் பெயர்ந்து உள்ளனர் எனப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.



இந்த நிலையில், தலைநகர் டமாஸ்கஸ் அருகே கிளர்ச்சியா ளர்கள் பகுதியைக் குறிவைத்து நேற்றுமுன்தினம் கடுமையான வான்தாக்குதல் நடைபெற்றது.

இந்தத் தாக்குதல்களில் அப் பாவி மக்கள் 24 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்களில் 10 பேர் குழந்தைகள் என்பது பதற வைக்கும் தகவலாக அமைந்துள் ளது.

இந்தத் தாக்குதல்களை நடத் தியது அதிபர் ஆதரவு படைகளா அல்லது அவர்களுக்குப் பக்க பலமாக உள்ள ரஷ்யாவின் படை களா? என்பது தெரியவரவில்லை என்று சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறுகிறது.

(க)

## சஹாராப் பாலைவனத்தில் கடும் பனிப்பொழிவு



அல்கைர்ஸ்,ஜன.12

உலகிலேயே அதிக வெப்பம் நிலவக் கூடிய சஹாராப் பாலைவனப் பகுதியில் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக வெப்பம் நிலவக்கூடிய இடங்களுள் ஒன்று சஹாரா பாலைவனம். இது ஆபி ரிக்கா கண்டத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள் ளது. சஹாரா பாலைவனத் தின் அய்ன்செப்ரா மற்றும் அல்ஜீரியா ஆகிய இடங் களில் கடந்த ஞாயிற்று கிழமை முதல் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது.

சுமார் 15 அங்குலம் உயரத்துக்குப் பனிக்கட்டி கள் பாலைவனத்தை மூடியுள்ளன. கடந்த 40 ஆண்டுகளில் தற்போது மூன்றாவது முறை இங்கு பனிப்பொழிவு ஏற் பட்டுள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலும் இங்கு பனிப் பொழிவு ஏற்பட்டது. ஆனால், இம்முறை அதிகளவில் பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய பகுதியில் ஏற்பட்டுள்ள அதிக அழுத் தம் மற்றும் குளிர் காற்று இந்த பனிப்பபொழிவுக்குக் காரணமாக இருக்கலாம் என வானிலை மைய அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

(ப)

# வடகொரியா தலைவரை சந்தித்துப் பேசத் தயார்

## தென்கொரிய அதிபர் பரபரப்புப் பேட்டி

சியோல்,ஜன.12

வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன்னுடன் உச்சிமாநாடு நடத்திச் சந் தித்துப் பேசத் திறந்த மனதுடன் இருக் கின்றேன் எனத் தென்கொரிய அதிபர் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுக்கும், தென்கொரி யாவுக்கும் இடையே உயர்மட்ட அளவி லான பேச்சு இருதரப்பு எல்லைப்பகுதி யில் அமைந்துள்ள பான்முன்ஜோம் கிராமத்தில் இடம்பெற்றது.

2 ஆண்டுகளுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே முதன்முத லாக நடந்துள்ள இந்தச் சந்திப்பு இணக் கமாக அமைந்தது. தென்கொரியாவின் பியாங்சாங் நகரில் அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் தனது நாட்டு அணியை அனுப்ப வடகொரியா ஒப்புக் கொண்டுள்ளது.




இது இருதரப்பு உறவில் ஒரு திருப்ப மாகப் பார்க்கப்படுகிறது. இந்த நிலை யில், தென்கொரியாவின் அதிபர் மூன் ஜே இன் நேற்றுமுன்தினம் சியோலில் நிரு பர்களுக்குப் பேட்டி அளித்தார். அப் போது அவர், குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க வடகொரியா அறிவித்து இருப்பது மிகவும் விரும் பத்தக்கது.

மேலும், இருதரப்பு உறவுகளை மேம் படுத்தும், அணு ஆயுதப் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவரும் என்கிற பட்சத்தில் வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன்னுடன் உச்சிமாநாடு நடத் திச் சந்தித்துப் பேசத் திறந்த மனதுடன் இருக்கிறேன் என்றும் தெரிவித்துள் ளார்.

(ப)

## பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம் அதிபர் ட்ரம்பின் முடிவில் மாற்றமா?



பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந் தத்தில் இருந்து விலகிய அமெ ரிக்கா, தற்போது தனது நிலைப் பாட்டை மாற்றிக்கொள்ள முன்வந் துள்ளது எனத் தகவல் வெளியாகி யுள்ளது.

குளோபல் வோர்மிங் என்ற ழைக்கப்படுகிற உலக வெப்பமயமா தல் பிரச்சினைக்குக் காரணமான பசுமை குடில் வாயுக்களின் வெளி யேற்றத்தைக் கட்டுப்படுத்த, அமெ ரிக்கா மற்றும் 187 நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தம், பாரிஸ் பருவ நிலை மாற்ற ஒப்பந்தம் ஆகும்.

அமெரிக்க முன்னாள் ஜனாதி பதி ஒபாமா காலத்தில் ஏற்படுத்தப் பட்ட இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியது. அமெ ரிக்காவுக்குச் சாதக மாக ஒப்பந்தத்தில் எந்த அம்சமும் இல்லை என்று விலகலுக்குக் காரணம் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலையில், நோர்வேபிரதமர்எர்னா சோல்பெர்க் நேற்று முன்தினம் ட்ரம்பை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார். அப்போது ட்ரம்பிடம் பாரிஸ் பருவக் நிலை ஒப்பந்தம் பற்றிக் கேட்கப்பட்ட போது, கையெழுத்திட்ட ஒப்பந் தத்தில் இருந்த அம்சங்கள் எனக் குப் பிடிக்கவில்லை. அமெரிக்கா வுக்குச் சாதகமான அம்சங்கள் அதில் சேர்க்கப்பட்டால், பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந் தத்தில் அமெரிக்கா மீண்டும் சேர வாய்ப்புள்ளது. – என்றார்.

ட்ரம்பின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என எதிர்பார்க்கப்படு கிறது.

(ப)

## செயல் இழந்த சீன விண்வெளி ஆய்வகம்: பசிபிக் பெருங்கடலில் விழும் எனத் தகவல்

பீஜிங்,ஜன.12

சீனாவின் தியாங்காங் என்ற விண்வெளி ஆய்வுகூடம் செயல் இழந்ததால் இது பூமியின் பின்புறம் விழும் என விஞ்ஞானி ஷு ஷாங்பெங் கூறியுள்ளார்.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து விண்வெளி ஆய்வுகூடம் கட்டி வருகின்றனர். இதற்கு இணையாகச் சீனா மட்டும் தனியாக ஒரு விண்வெளி ஆய்வகம் உருவாக்கியது.

இதற்கு தியாங்காங் எனப் பெயரிடப்பட்டது. இந்த ஆய்வகம் செயல் இழந்து விட்டது. எனவே இது பூமியை நோக்கி வருகிறது. பல்லாயிரம் தொன் எடை கொண்ட இந்த விண்வெளி ஆய்வ கம் பூமியின் மீது மோதிக் கடும் சேதத்தை விளை விக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதைச் சீன விஞ்ஞானி மறுத்துள்ளார்.


சீன விண்வெளி தொழில் நுட்ப அக்கடமியின் மூத்த விஞ்ஞானி ஷு ஷாங்பெங் கூறும்போது, செயல் இழந்த தியாங்காங் 1 விண்வெளி ஆய்வ கம் பூமியில் இருந்து தொடர்ந்து கண்காணிக்கப் பட்டு வருகிறது. அது பூமியின் மீது மோதி பாதிப்பை ஏற்படுத்தாது.

பூமியின் பரப்பில் நுழைந்தவுடன் அது எரிந்து விடும். மீதம் இருக்கும் உடைந்த பாகங்கள் பூமியின் பின்புறமாகவுள்ள பசிபிக் பெருங்கடலில் விழச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

(ப)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தினகரன் ஆதரவாளர்கள் 100 பேர் அதிரடி நீக்கம்


ஈ.பி.எஸ். — ஓ.பி.எஸ். நடவடிக்கை

சென்னை,ஜன.12

கோவை-சேலம்-நீலகிரி, நாமக்கல்லில் தினகரன் ஆதரவாளர்கள் 100 பேரை அதிரடியாக நீக்கி அ.தி.மு.க., ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி நடவடிக்கை எடுத்துள்ளனர்

கோவை, சேலம், நீலகிரி, நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் 100 பேர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக அ.தி.மு.க., ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கழகத்தின் கொள்கை- குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயற்பட்டதால் கோவை புறநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதரவாளர்கள் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## சட்டசபையில் இருந்து தினகரன் வெளிநடப்பு

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேச அனுமதி அளிக்கப்படாததால் ஆர்.கே.நகர் எம்.எல்.ஏ. தினகரன் தமிழக சட்டசபையில் இருந்து நேற்று வெளிநடப்பு செய்தார்.

தமிழக சட்டசபைக் கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இந்தக் கூட்டத்தொடரை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றித் தொடங்கி வைத்தார். அதைத்தொடர்ந்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், சட்டசபையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேச அனுமதி தராததால் தினகரன் வெளிநடப்பு செய்தார்.

வெளிநடப்பு செய்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஆர்.கே.நகர் தொகுதி மக்கள் 57 ஆயிரம் பேருக்கு வீடு கட்டித்தருவது தொடர்பாகப் பேச இருந்தேன். மீன் அங்காடியை தரம் உயர்த்துதல், குடிதண்ணீர் பிரச்சினை உள்ளிட்டவை தொடர்பாகவும் பேச இருந்தேன். உணவு இடைவேளை சமயத்தில் பேச வாய்ப்பு தருகிறன் எனச் சபாநாயகர் கூறியிருந்தார். ஆனால், எனக்குப் பேச வாய்ப்புத் தரவில்லை. இதைக்கண்டித்து வெளிநடப்பு செய்தேன், எனக் கூறினார்.

# வெளிநாட்டு கார் இறக்குமதி வழக்கு: சி.பி.ஐ. நீதிமன்றில் நடராஜன் சரண்

வெளிநாட்டு கார் இறக்குமதி வழக்கில் சி.பி.ஐ. நீதிமன்றில் சசிகலாவின் கணவர் நடராஜன் நேற்றுக் காலை சரணடைந்தார். அவர் சார்பில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சசிகலாவின் கணவர் நடராஜன், அக்கா மகன் பாஸ்கரன் ஆகியோர் 1994ஆம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து சொகுசு காரை இறக்குமதி செய்தனர்.

அப்போது இந்த கார் இங்கிலாந்து நாட்டில் பயன்படுத்தப்பட்ட பழைய கார் என்று கூறி, வரியைக் குறைவாகச் செலுத்தினர். ஆனால், அந்த கார் புத்தம் புதியது என்று தெரியவந்தது.

போலி ஆவணங்கள் மூலம் புதிய காரை, பழைய கார் என்று கூறி இறக்குமதி செய்தமையால், அரசுக்கு 1.62 கோடி ரூபா இழப்பு ஏற்படுத்தினர் என சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் நடராஜன், பாஸ்கரன் உள்ளிட்ட 4 பேருக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்று தீர்ப்பு அளித்தது. இந்தத் தீர்ப்பை சென்னை உயர் நீதிமன்றும் கடந்த மாதம் உறுதி செய்தது.

இதையடுத்து, தண்டனை பெற்றவர்கள் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் சரணடைய வேண்டும். ஆனால், அவர்கள் உயர் நீதிமன்றில் பிணை கேட்டு முறையிட்டனர். இதையடுத்து 25 லட்சம் ரூபாவை உத்தரவாதத் தொகையாகச் செலுத்தி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் பிணை பெற்றுக் கொள்ளலாம் என்று உயர் நீதிமன்று உத்தரவிட்டது.

இதன்படி, சசிகலாவின் கணவர் நடராஜன் நேற்றுக்காலையில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

ஆண்டாள் பற்றிய விமர்சனம்:

# கவிஞர் வைரமுத்துவை மன்னிப்பதுதான் பண்பாடு




நடிகர் விவேக்

சென்னை,ஜன.12

ஆண்டாள் பற்றி விமர்சனம் செய்தார் என கவிஞர் வைரமுத்துவுக்கு எதிராக நடக்கும் போராட்டங்களை நிறுத்திவிட்டு, மன்னிப்புக் கேட்ட அவரை மன்னிப்பதுதான் பண்பாடு என்று நடிகர் விவேக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் 'தமிழை ஆண்டாள்' என்ற கருத்தரங்கம் சில நாள்களுக்கு முன்பு நடந்தது. இதில் பேசிய கவிஞர் வைரமுத்து, ஆண்டாள் தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வைரமுத்துவுக்கு பா.ஜனதா தலைவர் எச்.ராஜா, பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் உட்படப் பலர் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து வைரமுத்து, தனது பேச்சு யாரையாவது புண்படுத்தி இருந்தால் அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார். என்றாலும் தொடர்ந்து வைரமுத்துக்கு எதிராக இந்து அமைப்புகளும், பா.ஜனதா வினரும் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள்.

ஆனால், வைரமுத்து மன்னிப்பு கேட்டமையால் அதை ஏற்றுக்கொள்வது தான் பண்பாடு என்று நடிகர் விவேக் கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டரில் கூறியிருப்பதாவது-

அனைத்து மத ஆன்மீக உணர்வுகளையும் நாம் மதிக்க வேண்டும். தாயார் ஆண்டாள் இறையருள் பெற்ற கவி. ஆழ்வார்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். யாரோ வெளிநாட்டில் எழுதிய கட்டுரை தேவையற்றது. கவிஞர் வைரமுத்து மன்னிப்புக் கேட்பதும், அவரை மன்னிப்பதும் பண்பாடு.

தமிழுக்கும், இலக்கியத்துக்கும் திரைப்பாடலுக்கும் பெரும் பங்களிப்பு செய்தவர். அவர் படைத்த மரங்கள் கவிதை வனங்களின் தேசிய கீதம். அவரது விளக்கத்தை ஏற்போம். கண்ணியம் காப்போம் என்று தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்துத் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு!




இங்கிலாந்து அணி மார்ச் மாதம் நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் மீண்டும் இடம்பிடித்துள்ளார். அத்துடன், டெஸ்ட் போட்டியில் 24 வயதான லியாம் லிவிங்ஸ்டோன் அறிமுகமாகிறார். மேலும், காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள வேகப்பந்து வீச்சாளர் மார்க் வுட் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

இங்கிலாந்து அணி வீரர்கள் விவரம் வருமாறு:

ஜோ ரூட் (கப்டன்), மொயின் அலி, ஜேம்ஸ் அண்டர்சன், ஜானி பேரிஸ்டோ, ஸ்டுவர்ட் பிராட், அலிஸ்டர் குக், மேசன் கிரேன், பென் போக்ஸ், லியாம் லிவிங்ஸ்டோன், டேவிட் மெலான், கிரெய்க் ஒவர்டோன், பென் ஸ்டோக்ஸ், மார்க் ஸ்டோன்மென், ஜேம்ஸ் வின்ஸ், கிரிஸ் வோக்ஸ் மற்றும் மார்க் வுட் ஆகியோர் அடங்கிய 16 வீரர்கள் கொண்ட பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## 6 மாதங்களின் பின்னர் மீண்டும் ஜோகோவிச்



முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த 6 மாதங்களாக போட்டியில் பங்கேற்காமல் இருந்த ஜோகோவிச் ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்கிறார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாமான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகிறது. முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த 6 மாதமாக போட்டியில் பங்கேற்காமல் இருந்து வந்த ஜோகோவிச் (செர்பியா) மெல்போர்னில் நேற்றுமுன்தினம் நடந்த காட்சி போட்டியில் 6:1, 6:4 என்ற நேர்செட்டில் உலக தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கும் டொமினிக் திமைத் (ஆஸ்திரியா) தோற்கடித்தார்.

முன்னாள் வீரரும், 6 முறை ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றவருமான ஜோகோவிச் அளித்த பேட்டியில், இது சிறப்பான ஒரு தொடக்கம். மீண்டும் களம் திரும்பியது மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்தார். இதன் மூலம் ஜோகோவிச் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் களம் இறங்குவது உறுதியாகி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (பு)

## நீண்டகால அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டுள்ளார் மத்தியூஸ்

### லெப்ரோய்



மத்தியூஸை நீண்ட காலத் திட்ட அடிப்படையில் அணித் தலைவராக நியமித்துள்ளோம் என இலங்கை அணித் தெரிவுக் குழுத் தலைவர் லெப்ரோய் தெரிவித்துள்ளார்.

உடற்தகுதியுடன் திறமையை வெளிப்படுத்தினால் மத்தியூஸ் 2019 உலகக் கிண்ணப் போட்டிக்கு அப்பாலும் செல்லலாம். ஆனால், அவர் நடைபெறவுள்ள பங்களாதேஷ் போட்டியில் பந்துவீசமாட்டார். ஏனெனில், இப்போது தான் அவர் உபாதையிலிருந்து மீண்டு வந்துள்ளார். எதிர்காலத்தில் அவர் பந்துவீசுவாரா என்பது பின்னர் தீர்மானிக்கப்படும். அவர் திடகாத்திரத்துடன் திறமையை வெளிப்படுத்துவாரானால் அவரைத் தொடர்ந்தும் தலைவராகக் கொண்டிருப்போம் என லெப்ரோய் தெரிவித்தார். (பு)

## ஐ.பி.எல். போட்டிகளில் ஜோ ரூட் பங்கேற்கக் கூடாது



பெய்லிஸ்

ஏப்ரல் மாதம் தொடங்கவுள்ள ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்தில் ஜோ ரூட் பங்கேற்கக் கூடாது என இங்கிலாந்து அணிப் பயிற்சியாளர் டிரிவொர் பெய்லிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரில், ஆஸ்திரேலியா 4:0 என அபாரமாக வெற்றி பெற்றது. இந்த நிலையில், இங்கிலாந்து அணியின் கப்டன் ஜோ ரூட் ஐ.பி.எல். தொடரில் விளையாடக் கூடாது என அந்த அணியின் பயிற்சியாளர் கூறியுள்ளார்.

சுமார் 2 மாதத்திற்கும் மேலாக நடைபெற்ற ஆஷஸ் தொடரால் இங்கிலாந்து வீரர்கள் உடலளவிலும், மனதளவிலும் சோர்வடைந்துள்ளனர். மேலும் ஜோ ரூட் தற்சமயம் நல்ல நிலையில் இல்லாதமையாலும், 2018ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணிக்கு அடுத்தடுத்த தொடர்களில் விளையாட இருக்கின்றமையாலும், அவர் ஐ.பி.எல். தொடரில் விளையாடாமல், தனது விளையாட்டை மேம்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (பு)

## தேசிய கபடி அணிக்கான தேர்வுகள் இன்று ஆரம்பம்!

ஆசிய போட்டிகள் மற்றும் எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள சர்வதேச போட்டிகளுக்கான தேசிய கபடி அணிக்கான வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான தேர்வு 12, 13, 14ஆம் திகதிகளில் டொரிங்டன் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

ஆண்கள், பெண்கள் தேசிய அணிக்கான இந்தத் தேர்வுக்கான பதிவு நடவடிக்கைகள் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 0721311965 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (பு)

## ஐ.பி.எல். ஏலத்தில் மீண்டும் யூசுப் பதான்



ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய யூசுப் பதான் தடைக்காலம் முடியவுள்ளதையடுத்து எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும் ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் கலந்துகொள்வார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்ந்தவர் இர்பான் பதான். இவரது சகோதரர் யூசுப் பதான். 2008ஆம் ஆண்டு அறிமுகமான ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக இவர் இருந்தார்.

இந்திய அணியில் அதிக அளவில் இடம்பிடிக்காவிடினும், ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். பி.சி.சி.ஐ. நடத்தும் உள்ளூர் தொடர்களில் பரோடா அணிக்காக யூசுப் பதான் விளையாடி வருகிறார். கடந்த பருவ காலத்தில் விளையாடும்போது, இவருக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. அப்போது தடைவிதிக்கப்பட்ட ஊக்கமருந்தை உட்கொண்டது தெரியவந்தமையை யடுத்து அவருக்கு ஐந்து மாதங்கள் கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், அவருக்கு விதிக்கப்பட்ட தடைக்காலம் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெற உள்ள ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் யூசுப் பதான் கலந்துகொள்வார் எனக் கூறப்படுகிறது. (பு)

## விளையாட்டு வீரர்களுக்கு அரச வேலை வாய்ப்புக்கள்!

### தயாசிறி ஜயசேகர

விளையாட்டில் சிறப்பான திறமைகளைக் கொண்டிருக்கும் வீர, வீராங்கனைகளுக்கு அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது. இத்தகவலை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சர்வதேச போட்டிகளில் இலங்கையிலிருந்து வீர, வீராங்கனைகளைப் பங்குபற்றச் செய்யும் முயற்சிகளும் அவர்களுக்கான பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இதில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகள் தமது திறமைகளைச் சிறப்பாக வெளிப்படுத்தும் பட்சத்தில், அவர்கள் உரிய தகுதிகளைக் கொண்டிருந்தால் அரச நிறுவனங்களில் பணி நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். (பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை மத வழிபாட்டுத் தலங்களில் நடத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என உள்ளூராட்சிமன்றத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோர முன்னரேதேர்தல்கள்ஆணைக் குழு அறிவித்திருந் தது.

இந்தநிலையில்அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன்இணைந்துதமிழ்த்தேசியப் பேரவை என்ற தேர்தல் கூட்டில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வளாகத்தில் தமது தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர். அது தொடர் பான செய்திகள் ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

இந்த விடயத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு கவனத்தில் எடுத்தது. தேர்தல்கள் ஆணைக் குழுவின் விதிமுறைகளை அந்தக்கட்சிமீறிவிட்டதாகஆணைக் குழுவால் சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கையில் இவ்வாறான மீறலைஅந்தக்கட்சியேசெய்து விட்ட நிலையில் ஆலய வளாகத்தில் தேர்தல் பரப்புரைக்கு அனுமதித்த ஆலயக் குருக்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்த நிலையில் தேர்தல்களுக்குப் பொறுப்பான பொலிஸ் பிரிவினரால் தெல்லிப்பழைப் பொலிஸாரின் ஊடாக மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய குருக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவருக்குத் தேர்தல் விதிமுறை தொடர்பில் உரிய கட்டளையை வழங்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றுக்கு குருக்கள் நேற்று அழைக்கப்பட்டார்.

இதனடிப்படையில் நீதிமன்றின் அறிவுரை குருக்களுக்கு நேற்று வழங்கப்பட்டது. அத்துடன்இந்தக்குற்றச்சாட்டுமீதான வழக்கு விசாரணைகளிலிருந்தும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய குருக்கள்விடுவிக்கப்பட்டார். (ஐ)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான செயற்பாட்டாளருமான பஸில் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தியுள்ளதாகவும் இது பெரும் சாதனை எனவும் நல்லாட்சி அரசு தம்பட்டமடித்துக் கொண்டது. ஆனால் இப்போது தனது பதவிக் காலத்தை நீடிக்க ஆசைப்பட்டு அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார் மைத்திரிபால.

தற்போதைய அரசின் வினைத்திறனற்ற ஆட்சியின் காரணமாக சாலாவ முதல் மீதொட்டமுல்லகுப்பைமேட்டுச் சரிவு உட்பட பல்வேறு இடர்களுக்குமக்கள்முகங்கொடுக்க நேரிட்டது. மக்களது நாளாந்த வாழ்க்கை தொடர்ச்சியாக பாதிக்கப்படுகிறது.

இதற்கான பதில்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத்தேர்தலில்மக்கள் வழங்குவார்கள்–என்றார். (ஐ)

## அ'புரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றம் கடந்த 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 24 ஆம் திகதி அமைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதச் செயல்கள் தொடர்பானவழக்குகள்மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்காக இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

அன்றைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் இந்த நீதிமன்றத்தை அமைத்தார்.

அனுராதபுரம் விமானப் படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் வான் மற்றும் தரை வழித் தாக்குதலை நடத்தி விமானப்படைக்குச் சொந்தமான 10 விமானங்களை முற்றாக அழித்ததுடன் மேலும் ஆறு விமானங்களைப் பாதியளவில் சேதப்படுத்தினர்.

இதில் 14 படையினர் கொல்லப்பட்டதுடன் அரசுக்குச் சுமார் 400 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டது.

இந்தச்சம்பவம்தொடர்பான வழக்கும், மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உட்பட 32 பேர் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கும் அனுராதபுரம் விடே நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆறு ஆண்டுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று காலை இடம்பெற்றது,

இதில் சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரியவினால் முன்வைக்கப்பட்ட வாதத்திலேயே, 2015 ஜனவரி 9 ஆம் திகதி தொடக்கம், மைத்திரிபால சிறிசேன ஆறு ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியும் என்று கூறப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆறு ஆண்டுகள் பதவி வகிப்பதற்கான ஆணையே வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்புத் திருத்தத்தினால் இதில் மாற்றங்களைச் செய்ய முடியாது. அவ்வாறுமாற்றம்செய்வதற்குபுதியமக்கள்ஆணையும், நாடாளுமன்ற அங்கீகாரமும் பெறப்படவேண்டும்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக வரையறை செய்யும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம், மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற பின்னரே, 2015 மே மாதம்தான் நடைமுறைக்கு வந்தது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை, ஜனாதிபதிகூட மாற்ற முடியாது. வேண்டுமானால் அவர் பதவியை விட்டு விலகலாம். ஆனால், அவருக்குப் பதிலாகஅந்தப்பதவியைப்பொறுப்பேற்பவர், ஆறு ஆண்டுபதவிக் காலத்தின் எஞ்சிய காலப்பகுதியைநிறைவுசெய்யவேண்டும்.

கடந்த நாடாளுமன்றம் ஆறு ஆண்டுபதவிக்காலத்தை நிறைவு செய்திருந்தது. 19 ஆவது திருத்தச்சட்டத்தினால் அதன் பதவிக்காலத்தில் குழப்பம்ஏற்படவில்லை. அந்தநடைமுறை அச்சமயம் கடமையில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலத்துக்கும் பொருந்தும்.

அடுத்த ஜனாதிபதிக்கே ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பதற்கானஆணையைமக்களால் வழங்க முடியும். – என்று சட்டமா அதிபர்தனது வாதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலையே அவரை நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கூட்டமைப்பின்சார்பில்வலிகாமம் தென்.மேற்குப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் பகிரதனின் குடும்பத்துக்கும் அயல் வீட்டுக்காரருக்கும் இடையே நேற்றுமுன்தினம் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருக்கிறது.

இதன்போது பகீரதனின் குடும்பத்தினர் கடுமையான வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர் எனவும், இதனை அயல்வீட்டுப் பெண்மணி பகீரதனின் மனைவியிடம் கேட்பதற்குச் சென்றுள்ளார். இதன்போது பகீரதன் அந்தப்பெண்ணைத்தாக்கினார் எனப் பொலிஸார் கூறினர்.

தாக்குதலுக்குள்ளானஅயல் வீட்டுப் பெண் மானிப்பாய் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுசெய்திருந்தார். இதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்றுப் பகீரதன் கைதானார் எனக்கூறப்பட்டது. (ஐ–7)

## வட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினருமானசுரேஷ்பிரேமச்சந்திரன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்கள்தங்கள்காணிகளைச் சுவீகரிக்கவிடாது பல தடவைகள்தொடர்ச்சியாகஅழுத்தங்களைக் கொடுத்தார்கள். எனினும் அந்த காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது சகித்துக் கொள்ள இயலாத விடயமாகும்.

வடக்கு மாகாணத்தில் கடற்படைமுகாம்கள்சந்திக்குச்சந்தி இருக்கும் நிலையில், புதிதாக மக்களுடைய காணிகளை அபகரித்து அமைக்கவேண்டிய தேவை உள்ளதா? தமிழ் மக்களுக்கு எல்லாம் செய்வோம் எனக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் தலைவரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும்–என்றார். (ஐ–7)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது பதவிக் காலம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கோரி ஜனாதிபதி சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டுள்ள நிலையிலேயே முன்னாள்ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

19ஆவது திருத்தச் சட்டம் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி பதவியேற்ற ஜனாதிபதித் தேர்தலைப் பாதிக்காது என்றால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குத் தடையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டில் பதவி ஏற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 6 ஆண்டுகள் ஆட்சி செய்ய முடியும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால், தமக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்வித தடையும் கிடையாது என்றும்மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## பரீட்சையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனவாதச் சிந்தனையின் வெளிப்பாடாகவே கருதுவதாக முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தாளார்.

எனவே உடனடியாகப் பெறுபேற்றை வெளியிட வேண்டுமென்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பினருடன்பேசி இதற்கு நல்லதொரு தீர்வை ஏற்படுத்தவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கருத்துவெளியிடுகையிலையே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கணக்காளர் தரம் 3 இற்கான பரீட்சை 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டு 2017 இல் நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள்2017ஆம்ஆண்டு வருட இறுதியில் வெளியாகி அதற்கான நியமனங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இந்தப் பரீட்சைக்கானமுடிவுகள்வெளியிடாமலே பரீட்சை முற்று முழுதாக இடைநிறுத்தப்படுவதாகஅரசால்அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த இடைநிறுத்தம் ஏன் என்பது தொடர்பில் காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் நாங்கள்அறிந்தவரைஇலங்கை முழுவதும் நடந்த பரீட்சையில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அதிகப்படியான இடங்க ளில் தேர்வு பெற்றிருப்பதன்காரணமாகவே அது இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் இப்பொழுது மீண்டும் இந்தப் பரீட்சைக்கான அறிவித்தல் வந்திருக்கிறது. அதுவும் பரீட்சைக்கான நேர காலம் கொடுக்காது அல்லது எந்தவித முன் அறிவிப்போ தயார்படுத்தலோ இல்லாது பரீட்சை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பும் சட்டக் கல்லூரியில்தமிழ், முஸ்லிம்மாணவர்கள்கூடுதலானஇடங்களைப் பெற்றுக் கொள்ளப் போகின்றார்கள் என்று பௌத்த பிக்குகள் போராட்டம் நடத்தி மீண்டும் ஒரு பரீட்சையை வைக்க வேண்டுமென்ற சம்பவங்கள் முன்னரும் நடந்துள்ளன.

ஆகவே தமிழ்ப் பட்டதாரிகள் இவ்வாறானதொரு பரீட்சையை எழுதித் தங்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தநேரத்தில் அந்தப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியிடப்படாததுடன்அதற்கானகாரணங்கள் சொல்லாது பரீட்சையை இடைநிறுத்துவதாகச் சொல்வதென்பது உண்மையாகவே இன ரீதியாகத் திட்டமிட்ட செயற்பாடாக அமைகின்றது.

இதனால் ஏறத்தாழ எழுபதிற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் இன்றுவரை எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடனோஅல்லதுநாடாளுமன்றத்திலோ இது தொடர்பில் பேசவில்லை. ஆகவே இந்தப் பரீட்சை முடிவுகள் வெளிவர வேண்டும். இந்தப் பரீட்சை முடிவுகள்ஏன்இடைநிறுத்தப்படுகின்றன என் பது வெளிப்படுத்தப்படவேண்டும். மீண்டும் பரீட்சைக்குச் செல்வதென்பது சாதாரணமான விடயமல்ல.

ஆகவே நல்லாட்சி என்று சொல்லக் கூடியவர்கள் இப்பொழுதும் மிக மோசமான இனவாதச் சிந்தனையுடன் பரீட்சையை இடைநிறுத்தி மீண்டும் ஒரு புதுப் பரீட்சையை நடத்துவதென்பதுஏற்றுக்கொள்ளமுடியாதது. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் நீதிமன்றும் சென்றுள்ளார்கள் என அறிகிறேன்–என்றார். (ஐ–7)

## பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கம் அடுத்த 30 ஆண்டுகளுக்கு மக்களை பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய சுதந்திர முன்னணியின்செய்தியாளர்சந்திப்புநேற்றுக் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது. இதில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், இலங்கை வரலாற்றில் மிகவும்மோசமான ஆட்சியை முன்னெடுக்கும் அரசே இந்த அரசாகும். குறுகிய காலத்தில் நாட்டை வீணாக்கிய ஒரே அரசும் இதுவேயாகும். இவர்களின் மூலமே நாடு துண்டு துண்டாகச் சிதறி வருகின்றது.

ஒருபுறம் நாட்டைத் துண்டாடும் சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது, ஜெனீவா உடன்படிக்கைகளுக்கு அரசு இணக்கம் தெரிவித்து தமக்குத் தாமே சுருக்குக் கயிற்றை போட்டுக்கொண்ட அரசு இதுவாகும்.

அத்துடன் தேர்தலைப் பிற்போட்டு எதிர்க்கட்சியைக் கைக்குள்வைத்துகொண்டு முழுமையாக நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தி இந்த அரசு செயற்பட்டு வருகின்றது–என்றார். (மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்) (ஐ)

## குழப்பம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'காணொலிக் காட்சிகளைப் பெற்று, அதனை ஆதாரமாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும், சபையினுள் உறுப்பினர்களுக்கிடையில்கைகலப்பு ஏற்பட்டது. அவர்கள் முட்டி மோதிக்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை எந்தவொரு எழுத்து மூலம் முறைப்பாடும் செய்யப்படவில்லை எனக் கூறியுள்ள பிரதிச் சபாநாயகர், இந்தச்சம்பவம்தொடர்பில் கட்சித் தலைவர்கள் சிலர் விசாரணை நடத்துமாறு கோரியுள்ளனர்எனவும்தெரிவித்தார்.

எனவே கட்சித் தலைவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக நாடாளுமன்றக் குழப்பங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற்போயுள்ளார் என உறவினர்களினால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதீபன்திவானி (36 வயது) என்ற தாயும் மற்றும் அவரது பிள்ளைகளான பிரதீபன் கஜநிதன் (வயது -11), பவனிதன் (வயது–09) அருள்நிதன்(வயது –08) மற்றும் இரட்டை பிள்ளைகளான யதுசியா யஸ்ரிகா (வயது–02) ஆகியோரும் நேற்றுமுன்தினம்முதல்காணாமற்போயுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணின் கணவன் சாரதி வேலை செய்துவருகிறார் எனக் கூறப்படுகிறது. காணாமற்போன தினத்தன்று குடும்பத்தில்தாய்க்கும்மகளுக்கும் இடையில் பிரச்சினை ஒன்று இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் தாயார் வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்கு வந்த போது, வீடு பூட்டியிருந்துள்ளதுடன், பிள்ளைகள் ஐவரையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுலம் ம.வி. ஆசிரியையின் இடமாற்றம் மீளப்பெறப்பட்டது

## அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைக்கு தடை விதித்து யாழ். மேல் நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய சங்கீத ஆசிரியைக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான இடமாற்றல் கடிதம் நீக்கப்படுகின்றது. அந்த ஆசிரியைக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை அறிக்கைக்கு அமைவாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது.

இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று முன்தினம் கட்டளையிட்டார்.

ஆசிரியைக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதம் மீளப்பெறப்படுகின்றது. அவருக்கு எதிராக எந்த ஓர் ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படாது என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் முன்வைக் கப்பட்ட அறிக்கையை அடுத்தே மேல் நீதி மன்றம் இந்தக் கட்டளையை வழங்கியது.

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய சங்கீத ஆசிரியை திருமதி ஜெயகாந்தன் கலைச்செல்வி என்பவருக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கடந்த நவம்பர் 11ஆம் திகதியிடப்பட்டு இடமாற்றல் கடிதம் வழங்கப்பட்டது.

முறையான ஒழுக்காற்று விசாரணை முடிவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்ற பரிந்துரைக்கு அமைவாக 01.01.2018 இலிருந்து செயற்படும்படியாக தாங்கள் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப் படுகின்றீர்கள். அத்துடன் தங்களுடைய சேவைக் காலத்தில் மீண்டும் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இட மாற்றம் வழங்கப்படுகின்றது என்று அந்தக் கடிதத்தில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்டது.

ஒழுக்காற்றுக் காரணங்களின் அடிப் படையிலான இடமாற்றம் எனக் குறிப்பிட்டு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அனுப்பிவைக்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தை இடைநிறுத்தக் கட்டளை வழங்குமாறும் ஒழுக்காற்று விசாரணையில் மனுதாரரைக் குற்றவாளியாக இனங்கண்டமையைச் சட்ட ரீதியற்ற வெற்றும் வறிதானதும் என எழுத்தாணை ஆக்குமாறும் (நீக்குமாறும்) இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியை சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப் பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஒழுக்காற்று விசா ரணை உத்தியோகத்தர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக அந்த எழுத்தாணை மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எதிர்மனுதாரர்களை ஜனவரி 10ஆம் திகதியான புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளையிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், அதுவரை இடமாற்றக் கடிதத்தை நடைமுறைப்படுத்த இடைக் காலத் தடை விதித்திருந்தது.

யாழ்ப்பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. மனுதாரரான ஆசிரியை, தனது சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையானார்.

எதிர்மனுதாரர்களான வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

இரண்டாவது எதிர்மனுதாரரான வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனால் மன்றுக்குப் பதில் அறிக்கை முன்வைக்கப்பட்டது. அதில் ஆசிரியைக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதம் மீளப் பெறப்படுகிறது. அவருக்கு எதிராக எந்த ஓர் ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படாது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையை ஆராய்ந்த மன்று, மனுதாரின் ஆட்சேபனையை கேட்டது. மனுதாரருக்கு எதிரான அனைத்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் நீக்கப்படு வதால் ஏற்றுக்கொள்வதாக மனுதாரரின் சட்டத்தரணி மன்றுக்கு விண்ணப்பம் செய்தார்.

மனுதாரரான ஆசிரியைக்குக் கடந்த நவம்பர் 11ஆம் திகதி வழங்கப்பட்ட இட மாற்றக் கடிதம் மன்றால் தடை செய்யப்படுகிறது. அந்தக் கடிதம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாது என எழுத்துமூல கடிதத்தை மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் வடக்கு மாகா ணக் கல்வி அமைச்சின் செயலாளர் முன்வைக்க வேண்டும். ஆசிரியைக்கு எதிராக முன் னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் அவருக்கு எதிராக எந்த வொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாது என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

**பின்னணி**

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு 6ஆம் மாதம் மாண வி கள் இருவரைக் கொடுமைப் படுத்தினார் என்று ஆசிரியர் ஒரு மீது குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. அதனை அந்தப் பாடசாலையில் கடமையாற்றும் சங்கீத ஆசிரியை ஒருவரே முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த விடயம் அதிபர், ஆசிரியர்களால் மூடிமறைக்கப் பட்டது. எனினும் பாடசாலை மாணவர் கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதால், மாண விகள் இருவர் கொடுமைப் படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் கைது செய்யப்பட்டதுடன், இந்த விடயத்தை மூடிமறைத்த குற்றச்சாட்டில் அதிபர் மற்றும் ஆசிரியர் சிலர் தடுத்து வைக்கப்பட்டு நீதி மன்றால் எச்சரிக்கப் பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மாணவிகள் இருவர் கொடுமைப் படுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சங்கீத ஆசிரியை சாட்சியம் வழங்கியிருந்தார். இந்த நிலையில் சங்கீத ஆசிரியை மீது கல்வித் திணைக்களத்தால் ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையில் சர்வதேச தரத்தில் நவீன போக்குவரத்து நிலையம்





கொழும்பு, ஜன. 12

இலங்கையில் சர்வதேச தரத்திலான நவீன போக்குவரத்து நிலையம் ஒன்று அமைக் கப்பட்டுவருகின்றது.

பஸ் பயணத்திற்கான அனுமதி பற்றுச்சீட்டுடன் ரயிலிலும் பயணம் செய்யக் கூடிய வசதி இதன்மூலம் ஏற்படுத்தப்படும். 84 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் கொட்டாவ மெகும்புற என்ற இடத்தில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் பல வழிகளுக்கான போக்குவரத்து திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் இந்தத் திட்டத்தின் பிரதி பணிப்பாளர் நாளக்க திசாநாயக்க கருத்து தெரிவிக்கையில்–

இதுவே இலங்கையில் அமைக்கப்படும் முதலாவது பலவசதிகளைMulti Purpose இலக்காகக் கொண்ட மத்திய போக்குவரத்து நிலையமாகும்.

மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி சபையின் வழிகாட்டலின் கீழ் ஜப்பான் சர்வதேச புரிந்துணர்வுத் திட்டத்தின் உதவியுடன் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

ரயிலும் பஸ்ஸும் இணைந்த சேவையொன்று இலங்கையில் இதுவரையில் இல்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிர்மாணப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இதன் முக்கிய நோக்கம் களனிவெளி ரயில் பாதை மற்றும் ஹைலெவல் பாதை மற்றும் தெற்கு அதிகவேக பாதையினுடாகச் செல்லும் பஸ்களை ஒன்றிணைத்த மத்திய நிலையமாகச் செயற்படுவதாகும்.

இதே போன்ற ரயில் மற்றும் பஸ் சேவைகளையும் இணைப்பதனாலேயே இதற்கு மல்டி பேபஸ் சேவை மத்திய நிலையமென்று Multi - Purpose Transport Center பெயரிடப்பட்டுள்ளது.சர்வதேச தரத்திற்கு ஏற்ற வகையிலேயே இந்த சேவை மத்திய நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகள் முன் னெடுக்கப்படுகின்றன.

கொழும்பு கோட்டையில் இருந்து பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கும் இந்த இடத்திற்கு வந்த பிறகு ஒரே பயணச்சீட்டில் தமக்கு தேவையான இடத்திற்குப் பயணிக்க முடியும். இந்த வருட இறுதிக்குள் இந்த வசதியைப் பொது மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களமும் மற்றும் போக்குவரத்து அமைச்சும் இணைந்தே இந்தத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

மாகும்புற மல்டிப்பேபஸ் மத்திய நிலையம் திறக்கப்பட்ட பின்னர் நெடுஞ்சாலையின் முக்கியத்துவமாக இது திகழும். நெடுஞ்சாலை மற்றும் தெற்கு நெடுஞ்சாலைக்கு இது முக்கிய நுழைவாயில் மத்திய நிலையமாக அமையவுள்ளதுடன் இது முக்கிய கேந்திர நிலையமாகவும் இருக்கும். மேலும் , ஹைலெவல் வீதி யில் நிலவும் வாகன நெருக்கடிக்கு இது தீர்வாக அமையும்.

வெளிநாடுகளில் தனியார் வாகனப் போக்குவரத்திலும் பார்க்க பொது போக்குவரத்திற்கே முக்கிய இடம் அளிக்கப் பட்டுள்ளது. இதுபோன்றே இலங்கையிலும் மேலும் பல நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது, மத்திய நெஞ்சாலை அமைக் கப்பட்டு வருகின்றன. றுவான்புற அதிவேக நெடுஞ்சாலையும் இவ்வாறு அமைக்கத் திட்ட மிடப் பட்டுள்ளது.இவை அனைத்துக்கும் இது முக்கியமான தாகவே அமையும்.இதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து போக்குவரத்தும் இதனூடாகவே இடம்பெறும்.

கொழும்பின் முக்கிய போக்குவரத்து வீதிகள் ஹைலெவல் பாதையுடன் ஒன்றிணையும் வகையில் தெற்கு அதிவேகசாலை மற்றும் மாநகர போக்குவரத்து சேவை இதனூடாக ஆரம்பமாகும். இலங்கையின் சொகுசு ரயில் நிலையம் இங்கு அமைக்கப்படும். இது மின்சார வசதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

தனியார் நிறுவனம் ஒன்றிணைந்து களனி ரயில் பாதை யில் மாரப்பல்ல நிலையம் அகற்றப்பட்டு புதிதாக அமைக்கப்படுகின்ற சகல வசதிகளும் கொண்டதான உயர்தரத்தில் அமைக் கப்படும் இந்த ரயில் நிலையம் மாகும்புற என பெயரிடப்பட்டுள்ளது. (க)

# இலங்கைப் பெண்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்பு

கொழும்பு, ஜன. 12

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கும் ஜப்பான் MI என்ற நிறுவனத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கைக்கு அமைவாக இலங்கை பெண்களுக்கு ஜப் பானில் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதற்கமைவாக ஜப்பான் மொழி தேர்ச்சியில் N4 தரத் துடன் அல்லது கல்வியை தொடர்ந்த 18 இற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட யுவதிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

பாராமரிப்பு (Caregiver) பணிப்பெண் சேவையில் 100 இற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என இலங்கை வெளிநாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களுக்கு மாதாந்தம் ஒரு லட்சதது 35ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விற்பனை பிரிவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் பணியகத்தின் இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ளன. 011 27 91 814 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்தடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்று கொள்ள முடியும் என்று வெளிநாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# வடக்கு வேட்பாளர் பட்டியலில் பெயரளவில் மட்டும் பெண்கள்

## ‘கபே’ அமைப்பு குற்றச்சாட்டு



வவுனியா, ஜன.12

வடக்கு மாகாணத்தில் பல இடங்களில் பெயரளவில் மாத்திரம் பெண்களின் பெயர்கள் வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன என்று ‘கபே’ அமைப்பின் தேசிய அமைப்பாளர் அகமட்மனாஸ்குற்றம்சாட்டியுள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் வாக்கெடுப்புச் சட்ட திருத்தங்கள் மற்றும் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பில் வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணத்தில் பல இடங்களில் பெயரளவில் மாத்திரம் பெண்களின் பெயர்கள் வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் வட்டார ரீதியில் வெற்றி பெற்றாலும் சரி, பெறாவிட்டாலும் சரி என்ற மனோபாவத்துடன் தேர்தல் பிரசார வேலைத் திட்டத்தை ஆண்கள் முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

வட்டார ரீதியில் பெண்கள் தெரிவு செய்யப்படாமல் எல்லா கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் ஆண்கள் மாத்திரம் வெற்றி பெற்றால் மேலதிகப் பெயர்ப்பட்டியலில் இருந்து பெண்களின் பெயர்களை மாத்திரமே தெரிவு செய்து அனுப்பக்கூடிய சந்தர்ப்பத்தில் கட்சிச் செயலாளருக்குப் பெரும் பின்னடைவு ஏற்படும்.

எனவே கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெண்கள் போட்டியிடும் வட்டாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தி, அவர்கள் வெற்றி பெறுவதற்கான ஆலோசனைகளையும் அவதானத்தையும் வழங்க வேண்டும்.

இதேவேளைசிலவேட்பாளர்களும் கட்சிகளும் இன ரீதியிலான பிரசாரங்களை முன்னெடுப்பதை அவதானிக்க முடிகின்றது. ஆகவே இனரீதியாகவோ பிரதேசவாதத்தைத் தூண்டும் வகையிலோ பிரசாரங்களில் ஈடுபடுவதைக் ‘கபே’ அமைப்பு வன்மையாக்க கண்டிக்கின்றது - என்றார். (ஐ-100)

# யாழ். செயலக பணியாளர்கள் நல்லிணக்க வார உறுதியுரை



யாழ்ப்பாணம், ஜன. 12

நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்களின் உறுதியுரை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சால் ஜனவரி 8ஆம் திகதியில் இருந்து 14ஆம் திகதி வரை தேசிய நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தப் பட்டது.

இதனடிப்படையில் நாட்டின் பல்வகைமைத் தன்மையை ஏற்று இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒரு மித்து வாழக்கூடிய சூழலை உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் உறுதியுரை செய்து கொண்டனர். யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

# உள்ளூராட்சித் தேர்தலை உரியவாறு பயன்படுத்தவேண்டும் தமிழ் மக்கள்

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு!



யாழ்ப்பாணம், ஜன.12

மக்கள் சொந்தக் கால்களில் நின்று தமது வாழ்வியலை மேம்படுத்துவதற்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று யாழ். மாநகர சபை வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது மக்கள் அற்ப சொற்ப சலுகைகளுக்கோ அன்றித் தமது பகுதிகளில் உள்ள வீதிகளைச் செப்பனிடுவதற்கோ இதர கட்டுமானப் பணிகளையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்கோ வாக்களிக்காது, அதனூடாக அவற்றின் பலாபலன்களை உரியமுறையில் முன்கொண்டு செல்பவர்களை இனங்கண்டு வெற்றிபெறச் செய்யவேண்டும்.

அத்துடன் யாழ். மாநகர சபையை நாம் ஆளுகை செய்தபோது நகரின் சுத்தம் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாத்தது மட்டுமல்லாது, தமிழ் மன்னர்களுக்கும் தமிழ்மக்களைப்பாதுகாத்தபெருந்தகையாளர்களுக்கும் சிலைகளை அமைத்தோம்.

குறிப்பாக மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளைக்கொண்டு அபிவிருத்திகளை முன்னெடுத்தது மட்டுமன்றி அரசிடமிருந்து விஷேட நிதிகளைப் பெற்றும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருந்தோம்.

அந்தவகையில் நாம் முன்னெடுத்த பணிகளைத் தொடர்ந்தும் மக்களுக்குச் செய்வதற்கு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் எமது வீணைச் சின்னத்திற்கு ஆணையை வழங்குவார்களேயானால் அவர்களுடைய தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களது எண்ணக் கனவுகளை ஈடேற்ற நாம் உழைப்போம் - என்றார். (ஐ)

# வாக்குச்சீட்டில் இந்த முறை ஒரே இடத்தில் மட்டும் புள்ளடி

கொழும்பு, ஜன. 12

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர்கள் வாக்குச்சீட்டில்ஒரேஒரு இடத்தில் மாத்திரமே புள்ளடியிட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் பணியகத்தில் நடந்த கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அவர், வாக்குச்சீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட புள்ளடிகள் இடப்பட்டிருந்தால், அந்த வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும்.

வாக்குச்சீட்டில் விருப்பு வாக்குகளை அளிப்பதற்கான கட்டங்களோ இடைவெளிகளோ இடம்பெற்றிருக்காது.

வாக்காளர்கள் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழுவுக்கு எதிரே தான் புள்ளடியிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சென். ஜோன்ஸில் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் திறப்பு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் சர்வதேச தரங்களுக்கு அமைவானதாக மறுசீரமைக்கப்பட்டு, புத்தாக்கம் செய்யப்பட்ட கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தைத் திறந்து வைக்கும் வைபவரீதியான நிகழ்வு இன்று காலை 8.05 மணி முதல் நடைபெறவிருக்கின்றது.

ஒளிவெள்ளத்தில்விளையாடக்கூடிய வசதிகள், போதியபாதுகாப்புஏற்பாட்டு வசதிகள் ஆகியவற்றுடன், எழுபது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதியில் இந்த ஆடுகளம் புத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பழையமாணவர்களின் பங்களிப்பின் மூலமும், மாகாண சபை உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் உதவியுடனும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் வண. ஞானபொன்ராஜா தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் முன்னாள் கல்வி அமைச்சருமான ரி.குருகுலராஜாவும் விருந்தினராகக் கலந்துகொள்வார். (உ)

# தமிழருவியின் தாயார் காலமானார்

யாழ்ப்பாணம், ஜன. 12

சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் த.சிவகணேசன், சொற்பொழிவாளர் தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோரின்தாயார்திருமதி தம்பிராசா விசாலாட்சி நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகின்றன. (உ)

# மரண அறிவித்தல்



## திருமதி தம்பிராசா விசாலாட்சி

காரைநகர் - கோவளத்தைப் பிறப்பிடமாகவும் இல.78, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா விசாலாட்சி 11.01.2018 நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் கந்தையாபிள்ளை,நல்லபிள்ளை தம்பதியரின் மூத்த மருமகளும் க.தம்பிராசா (ஓய்வு பெற்ற Investigating inspecter - தபால் திணைக்களம், வவுனியா பிராந்தியம்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் பரஞ்சோதி தங்கம்மா, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும் அமரர்கள் ச.அருளானந்தம், வே.இராசதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், தமிழருவி சிவகுமாரன், சிவபாலன் (ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி), சிவகணேசன் (ஆசிரியர்பீடம், தினக்குரல்), சிவராணி (சிரேஷ்ட விரிவுரையாளர், மொழியியல், ஆங்கிலத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சிவசோதி (ஆசிரியர், ஆனைப்பந்தி மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சி.குமாரதேவி, திருமதி சி. கலாராணி, பேராசிரியர் சி. சிறிசற்குணராசா ( யாழ். பல்கலைக்கழகம் ), திருமதி சி.சுதர்ஜனா ( முகாமைத்துவ உதவியாளர், யாழ்.போதனா வைத்தியசாலை ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜனகன் ( பொறியியலாளர் ), கௌதமன் (பொறியியலாளர்) மதங்கன் (மாணவன், வவுனியா தமிழ் ம.ம.வி), பராபரன், பவித்திரன், ஸ்ரீசங்கர்ஷன் ( மாணவர்கள், யாழ். இந்துக் கல்லூரி ), தாமிரா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று, (12.01.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.78, யாழ். இந்துக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.